Registered as Newspaper

# உதயன்

சுடர் : 36 கதிர் : 177 | சனிக்கிழமை | வைகாசி 07 ஆம் நாள் 22 மே 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 13 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## நேற்றிரவு தொடக்கம் பயணத் தடை!

யாழ்ப்பாணம், மே 22

அரசு அறிவித்துள்ள மூன்று நாள்கள் பயணக் கட்டுப்பாடு நேற்று இரவு 11 மணிக்கு நடைமுறைக்கு வந் 12 ▶

# பயணக் கட்டுப்பாடுகளால் கொரோனா கட்டுக்குள் வராது!

**அரசை மீண்டும் எச்சரிக்கிறது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்**

கொழும்பு, மே 22

மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை, தேசிய அடையாள அட்டை முறைமை மற்றும் மூன்று நாள்கள் குறுகிய பயணக் கட்டுப்பாடு போன்றவற்றால் கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்த முடியாது. 11 ▶

## மூச்சு விட சிரமப்பட்ட 6 வயதுச் சிறுமி சாவு

*கைதடியில் சம்பவம்*

கொடிகாமம், மே 22

மூச்சு விடுவதற்குக் கஸ்டப்பட்ட சிறுமி ஒருவர் சாவகச்சேரி ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசென்ற போது உயிரிழுந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தச் சம்பவம் நேற்று 11 ▶

## பலாலி அந்தோனிபுரம் கிராமம் 199 குடும்பங்களுடன் முடக்கம்

*யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், மே 22

பலாலி வடக்கு கிராம அலுவலர் பிரிவிலுள்ள அந்தோணிபுரம் கிராமத்தில் தொற்றாளர்கள் அதிகம் இனங்காணப்பட்டமையால், அந்தக் 11 ▶



## தொடர் முடக்கம் சாத்தியம் இல்லை

*இராணுவத் தளபதி பிடிவாதம்*

கொழும்பு, மே 22

தொடர்ந்து 14 நாள்கள் நாட்டை முடக்குவது சாத்தியம் இல்லாதது என்று கொரோனாக் கட்டுப்பாட்டுக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித் 11 ▶

## யாழில் 41 பேர் உட்பட 80 பேருக்கு வடக்கில் தொற்று

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 41 பேர் உட்பட வடக்கு மாகாணத்தில் மேலும் 80 பேருக்குக் கொரோனாத் தொற்று உள்ளமை நேற்றுக் கண்டறியப்பட்டுள்ளது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ. கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை, யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் ஆயிரத்து 232 12 ▶

## கொரோனாத் தகவல்களை வழங்குவதைத் தடுக்காதீர்

*சுதந்திர ஊடக இயக்கம் போர்க்கொடி*

கொழும்பு, மே 22

ஊடகங்களுக்குக் கொரோனாத் தொற்றுத் தொடர்பில் தகவல்களை நேரடியாக வழங்க வேண்டாம் என அனைத்து சுகாதாரத் துறை 12 ▶

## நேற்றும் 3,538

கொழும்பு, மே 22

இலங்கையில் நேற்றும் 3 ஆயிரத்து 538 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் 11 ▶

## பயணக் கட்டுப்பாட்டுக் காலத்தில் பொருளாதார பாதிப்பு வரக்கூடாது

*கூறுகின்றார் ஜனாதிபதி*

கொழும்பு, மே 22

கொவிட் தொற்று நோயைக் கட்டுப்படுத்துவதற்காக நேற்று இரவு 11 மணி தொடக்கம் பயணக் கட்டுப்பாடு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறு கட்டுப் 11 ▶



## வங்காள விரிகுடாவில் சூறாவளி எச்சரிக்கை

கொழும்பு, மே 22

அந்தமான் கடல் பிராந்தியத்தின் வடக்கு வங்காள விரிகுடாவின் கிழக்கு மத்திய பகுதியில் ஏற்பட்டுள்ள தாழமுக்கம் எதிர்வரும் 72 மணித்தியாலங்களில் சூறாவளியாக மாறும் அபா 12 ▶

## முள்ளிவாய்க்கால் தூபி உடைப்பு ஐ.நாவிடம் ஆவணப்படுத்த கடிதம்

***தமிழ் கட்சிகள் ஒன்றிணைந்து கோரிக்கை முன்னணியின் 2 எம்.பிக்களும் ஒப்பமிடவில்லை***

யாழ்ப்பாணம், மே 22

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த மே 12ஆம் திகதி விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்ட விடயத்தை, ஐ.நா. மனித உரிமை கள் ஆணையாளர் அலுவலகத்தில் ஆவணப்படுத்த வேண்டும் என்ற முயற்சியில் கடிதம் 11 ▶

## முல்லை. கொரோனாக் கொத்தணிக்கு ஆடைத் தொழிற்சாலையே பொறுப்பு

*கரைதுறைப்பற்று தவிசாளர் தெரிவிப்பு*

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு பகுதி கொரோனாக் கொத்தணியாக மாறிவருகின்றது. முல்லைத்தீவு பகுதி இவ்வாறு மாறியதற்கான முழுப் பொறுப்பும் புதுக்குடியிருப்பில் இயங்கி வருகின்ற ஆடைத் தொழிற்சாலை தான் என்று கரைதுறைப் 12 ▶


## பருத்தித்துறையில் 144 மி.மீ. மழை

யாழ்ப்பாணம், மே 22

யாழ்ப்பாணத்தில் 90.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியுள்ளது என்று யாழ்பாணம் பிராந்திய வளிமண்டலவியல் திணைக்களப் பொறுப்பதிகாரி ரி.பிரதீபன் தெரிவித்தார். நேற்றுமுன்தினம் மாலை 12 ▶

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசிக்கும் மாபியாக்கள்




## மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல்

**கொழும்பு, மே 22**

**இலங்கையில் கொரோனாத் தடுப்பூசியை 5 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தகவல் வெளியிட்டுள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவிக்கையில்,

இலங்கையில் தடுப்பூசிக்குப் பற்றாக்குறை இருப்பதால், பல்வேறு இடங்களில் மக்கள் வரிசையில் நிற்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்தி தடுப்பூசி இயக்கத்தைப் பற்றிய எதிர்மறையான பிம்பத்தை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்த மோசடியை நிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்திடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

அரச வசமிருந்த தடுப்பூசிகள், மோசடியில் ஈடுபடும் சந்தேக நபர்களின் கைகளை எவ்வாறு அடைந்தன என்பது தொடர்பில் விசாரணைகளை மேற்கொள்ள வேண்டும் - என்றார். (ம-4)



# பரீட்சைகள் பிற்போகாது

கொழும்பு, மே 22

கல்விப் பொதுத் தராதர சாதாரணதர மற்றும் உயர்தரப் பரீட்சைகளை மீண்டும் பிற்போடுவதற்கான எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்று கல்வி அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், தற்போது தீர்மானிக்கப்பட்டுள்ள நாள்களில் இரண்டு பரீட்சைகளையும் நடத்துவதே எமது எதிர்பார்ப்பு. அதற்கமைவாக இந்த ஆண்டுக்கான கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையை எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 4ஆம் திகதி முதல் 30ஆம் திகதி வரையும், தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை ஒக்ரோபர் மாதம் மூன்றாம் திகதியும், கல்விப் பொதுத் தராதர சாதாரணதரப் பரீட்சையை அடுத்த வருடம் ஜனவரி மாதத்தின் இறுதிப் பகுதியிலும் நடத்துவதற்கு கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

அதேவேளை பாடசாலை மாணவர்களுக்கு ஒன்லைன் மூலம் வழங்கப்படும் கல்வி நடவடிக்கைகளுக்கு மாற்று நடவடிக்கையாக வேறு வேலைத்திட்டம் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது - என்றார். (ம-4)



# உண்மையான அறிக்கையை வெளியிடுக

கொழும்பு, மே 22

நாட்டில் கொரோனாத் தொற்று நிலைமைகள் தொடர்பில் உண்மையான அறிக்கைகளை ஊடகங்களுக்கு வழங்குவதில், சுகாதார அதிகாரிகள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே பணித்துள்ளார்.

கொரோனாத் தொற்று நிலைமையை மறைக்க நாங்கள் விரும்பமில்லை.

எனினும் தற்போதுள்ள கள நிலைமை தொடர்பில் பொது மக்களுக்குக் குழப்பத்தை ஏற்படுத்தாமல், சுகாதார அதிகாரிகள் பொறுப்புடன் அறிக்கைகளை வழங்க வேண்டியது அவசியம்.

சில சுகாதார அதிகாரிகளின் வெவ்வேறு அறிக்கைகளால் மக்கள் குழப்பமடைந்துள்ளனர்.

கொரோனா நிலைமை தொடர்பில் ஊடகத் தணிக்கை எதுவும் இல்லை என்பதால் அதிகாரிகள் அவதானமாக செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

# கொரோனா விடுதியில் 6 பேர் தலைமறைவு

கொழும்பு, மே 22

களுத்துறை, நாகொடை மருத்துவமனையின் கொரோனா விடுதியில் தங்கி, சிகிச்சை பெற்று வந்த கொரோனாத் தொற்றாளர்கள் ஆறு பேர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. மருத்துவமனையின் 3ஆவது விடுதியில் சிகிச்சை பெற்றுவந்த மூன்று பெண்களும், மூன்று ஆண்களுமே தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் மருத்துவமனையில் மதில் சுவருக்கு மேல் அமைக்கப்பட்டிருந்த வலையைப் பிரித்துத் தப்பிச் சென்றுள்ளனர். தப்பிச் சென்றவர்களில் பெண்ணொருவர் அடையாளம் காணப்பட்டுள்ளார். ஏனையோர் தொடர்பான தகவல்கள் மருத்துவமனையில் இல்லை.

கொரோனா தொற்றியிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுபவர்களையும், தொற்றாளர்களையும் ஒரே விடுதியில் தங்க வைத்திருந்தமையால், அவர்களுக்கு இடையில் பதற்றமான நிலைமை ஏற்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (ம-4)



# பி.சி.ஆர். பரிசோதனை அறிக்கைகள் மறைப்பு

## விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, மே 22

துல்ஹரிய ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையின் அறிக்கைகள் மறைக்கப்பட்டுள்ளமை தொடர்பில், விசாரணைகளை மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார் என்று சிங்கள ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தத் தொழிற்சாலையில் 4 ஆயிரம் ஊழியர்களுக்கு தனியார் மருத்துவமனையால் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 400 பேருக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சுகாதார பரிந்துரைகளின்றியே பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனால் பரிசோதனை முடிவுகளை ஒப்படைக்குமாறு கடந்த புதன்கிழமை சுகாதார அமைச்சால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. இதன்போது அறிக்கைகளின் விபரங்கள் அழிக்கப்பட்டு விட்டன என்று தனியார் மருத்துவமனையினரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒரு நாளில் ஆயிரத்து 200 பரிசோதனையை மாத்திரம் மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள போதிலும், குறித்த மருத்துவமனையில் வாரத்தில் இரண்டு நாள்களுக்கு 7 ஆயிரம் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும்



# கொரோனா பரிசோதனை முடிவுகள் மிகத்தாமதம்!

## சுகாதார பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 22

நாட்டில் கொரோனாப் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டு, சுமார் 10 நாள்களுக்குப் பின்னரே முடிவுகள் வெளியிடப்படும் நிலைமை தற்போது உருவாகியுள்ளது என்று பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பரிசோதனை அறிக்கைகள் தாமதிப்பதால் பலர் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டுள்ளது என்று சங்கத்தின் உப தலைவர் எஸ்.ஏ.யூ.டீ.குலதிலக்க தெரிவித்துள்ளார்.

அதேவேளை பரிசோதனை முடிவுகள் தாமதிப்பதால், வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் தொழில் பயிற்சிக்காகச் சென்றுள்ளவர்கள் அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்துள்ளனர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் தொற்றாளரை பராமரிக்க பலமான ஆளணிப் பலம் தேவை

## யாழ். மாவட்டச் செயலர் சுட்டிக்காட்டு



**யாழ்ப்பாணம், மே 22**

**யாழ்ப்பாணத்தில் கொரோனாத் தொற்று வீதம் அதிகரித்துள்ளது. தொற்றாளர்களை பராமரிக்க பலமான ஆளணி பலம் தேவை. ஆளணிப் பலம் பலவீனமடைந்து சென்றால் எதிர்காலத்தில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும் என்று யாழ்ப்பாண மாவட்டச் செயலர் க. மகேசன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

யாழ்.மாவட்டத்தில் தற்போது கொரோனா நிலவரம் சற்று அதிகரித்துச் செல்லும் நிலை காணப்படுகிறது. பொதுவாக வடமாகாணத்தில் அதிகரித்துச் செல்லும் போக்கு காணப்படுகிறது. ஆகவே நாம் அனைவரும் இச் சந்தர்ப்பத்தில் மிகுந்த விழிப்புணர்வுடன் இருக்க வேண்டிய காலகட்டமாகும். பொது மக்களை இக் கொடிய தொற்றிலிருந்து பாதுகாக்கவே இப் பயணக் கட்டுப்பாடுகள், தடைகள் விதிக்கப்படுகின்றன. ஆனால் பொதுமக்கள் அலட்சியப்போக்கில் செயற்படுவதைக் காண முடிகிறது. மருத்துவமனையில் தற்போது பெரும் இடப்பற்றாக்குறை காணப்படுகிறது. இடைநிலை பராமரிப்பு நிலையங்களை ஆரம்பித்தோம். அவை கூட தற்போது நிரம்பும் நிலையில் உள்ளன.

இத் தொற்றானது தற்போது ஊடுருவி பொதுமக்கள் அரச மற்றும் தனியார் நிறுவன ஊழியர்கள் எனப் பலரையும் பாதித்துள்ளது. இந்த நிலையில் அரச அலுவலகங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இயக்குகின்றன. இச் சூழ்நிலையில் பொதுமக்கள் மிக அவதானமாக இருக்க வேண்டும். இத் தொற்றால் சுகாதார பணியாளர்கள் கூட பாதிக்கப்பட்ட நிலைமை காணப்படுகிறது. ஆகவே பொதுமக்கள் தமது அலட்சியப்போக்கால் தொற்றை ஏற்படுத்த காரணமாக இருந்து, எதிர்காலத்தில் பராமரிக்கக் கூட இயலாத சூழ்நிலையை ஏற்படுத்த வேண்டாமெனக் கேட்டுக்கொள்கிறேன். எனவே விதிக்கப்பட்டுள்ள பயணத்தடைகள், சுகாதார விதிமுறைகளைப் பின்பற்ற வேண்டும். இதில் ஒவ்வொருவரதும் தனிப்பட்ட கடப்பாடும் உண்டு. மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் இவற்றைச் சமாளிப்பது எதிர்காலத்தில் சிக்கலான நிலைமையை ஏற்படுத்தும் என்பதை பொதுமக்களுக்கு தெரிவிக்க விரும்புகிறேன். மிக மிக அத்தியாவசியமான தேவை மற்றும் அலுவலக கடமை ஆகியவற்றுக்கு மட்டும் வெளியே செல்ல முடியுமெனக் கூறப்பட்டுள்ளது. தேவையற்ற பயணங்களைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். அனைவரதும் ஒத்துழைப்பும் கிடைத்தால் மட்டுமே இத் தொற்றை கட்டுப்படுத்த முடியும். தற்போது தொற்றாளர்களை பராமரிக்க பலமான ஆளணி பலம் தேவை. ஆளணிப் பலம் பலவீனமடைந்து சென்றால் எதிர்காலத்தில் பெரும் சவாலை எதிர்கொள்ள நேரிடும். எனவே தம்மையும் தமது குடும்ப உறவுகளையும் சமூகத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டும். இதற்கு மிகுந்த விழிப்புணர்வு அவசியம். பொதுமக்கள் சட்டத்தின் பிடியிலிருந்து தப்பிப்பதற்காக மட்டுமே முகக்கவசம் அணியாது, தம்மையும் சமூகத்தையும் பாதுகாக்க முன்வர வேண்டுமென வலியுறுத்த விரும்புகிறேன் - என்றார். (ப- 20)

# ஆடைத் தொழிற்சாலை ஊழியர்கள் அனைவருக்கும் பரிசோதனை

## தொழிற்சாலையை மூடுவதில் சிக்கல்

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி வானவில் மற்றும் விடியல் ஆகிய ஆடைத் தொழிற்சாலைகளின் ஊழியர்கள் அனைவருக்கும் கொவிட்19 நோய்த்தொற்று பரிசோதனை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.

விடியல் ஆடைத் தொழிற்சாலையில் 246 பேருக்கு நேற்று மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் 21 பேர் தொற்றுள்ளோராக இனங்காணப்பட்டனர். அதனையடுத்து, ஊழியர்கள் அனைவருக்கும் பரிசோதனைகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்று மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியகம் அறிவுறுத்தியுள்ளது.

எனினும், அனைவருக்கும் பரிசோதனை செய்யும் மருத்துவ மற்றும் ஆளணி வளம் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணியகத்தில் இல்லை என்பதால், தனியார் மருத்துவமனை மூலமாக இதனைச் செய்யவேண்டியிருக்கும் என்று, பணிப்பாளர் மருத்துவ கலாநிதி சரவணபவன் கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் கவனத்துக்குக் கொண்டுசென்றுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஆடைத் தொழிற்சாலை ஊழியர்களுக்கு கொவிட் தொற்று ஏற்படுவதாக தகவல் பரவியதையடுத்து, தொழிற்சாலை ஊழியர்களும், அவர்களது குடும்பத்தினரும் குழப்பமடைந்து தொழிற்சாலையை உடனடியாக மூடவேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர்.

எனினும், இது உடனடியாகச் சாத்தியமற்ற ஒரு நடவடிக்கை என்றும், சர்வதேச முதலீட்டாளர்களின் தொழிற்சாலையின் உற்பத்திச் செயற்பாடுகளையும், சந்தை வாய்ப்புக்களையும் அது அதிகம் பாதிக்கும் என்றும் தொழிற்சாலை வட்டாரங்கள் மூலம் தெரியவருகிறது.

கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலை மாத்திரமன்றி, நாடு முழுவதிலுமுள்ள ஆடைத் தொழிற்சாலைகளும் கொவிட் தொற்றுக் காலத்தில் எவ்வாறு பாதுகாப்பு நடைமுறைகளைப் பின்பற்றிச் செயற்பட வேண்டும் என்று அரசு வழங்கியுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைவாகவே நாடு முழுவதிலுமுள்ள அனைத்துத் தொழிற்சாலைகளும் இயங்கிவருகின்றன என்றும் தெரியவருகிறது.

ஆடைத் தொழிற்சாலைகள் மாத்திரமன்றி, பெரும் உற்பத்திகளில் ஈடுபடும் அனைத்துவிதமான தொழிற்சாலைகளிலும் நாட்டின் பொருளாதார நன்மைகளைக் கருத்திற்கொண்டு இந்தவிதமான நடைமுறைகளே பின்பற்றப்பட்டு வருகின்றன என்றும் அறியக்கிடைக்கிறது.

இந்த நிலையில், கிளிநொச்சி ஆடைத் தொழிற்சாலையை மட்டும் மூடுமாறு கோருவது நடைமுறைச் சாத்தியமற்றது என்பதுடன், அதற்காக ஊழியர்களை பாதிப்படையச்செய்ய முடியாது என்பதால், அவர்களுக்கான உரிய பாதுகாப்பு நடவடிக்கைகளை தொழிற்சாலை நிர்வாகம் மேற்கொள்ளும் என்றும் தொழிற்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (த-இ)

# தொற்று நீக்கியபின் திறக்கப்பட்டது சுதுமலை அம்மன் கோவில்

வலி.தென்மேற்கு, மே 22

சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் கோவில் தொற்று நீக்கம் செய்யப்பட்டதை அடுத்து கோவில் திறக்கப்பட்டு நித்திய பூஜைகள் மட்டும் இடம்பெற்று வருகின்றன.

இந்தக் கோவிலில் கொடியேற்றிய குருக்களுக்கு கொரோனாத் தொற்று இருப்பதாக சுகாதாரப் பிரிவினரால் உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து குருக்கள் வட்டுக்கோட்டையில் உள்ள கொரோனாத் தொற்று முகாமில் சிகிச்சைபெற்று வருகின்றார்.

குருக்களுக்கு ஏற்பட்ட கொரோனாத் தொற்றைத் தொடர்ந்து சுகாதாரப் பிரிவினரால் மூடி சீல் வைக்கப்பட்ட குறித்த கோவில் வலி. மேற்கு பிரதேச சபையினரால் தொற்று நீக்கம் செய்யப்பட்டதையடுத்து, கோவில் திறக்கப்பட்டு நித்திய பூசைகள் மட்டும் தினசரி இடம்பெற்று வருகின்றன. திருவிழாக்கள் நிறுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-115)

# சிகிச்சை நிலையங்களுக்கு தண்ணீர் போத்தல்கள் அன்பளிப்பு

முல்லைத்தீவிலுள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தால் குடிதண்ணீர் போத்தல்கள் வழங்கப்பட்டன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கொரோனா நோய்த் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டதால் பல இடங்கள் தனிமைப்படுத்தப்பட்டு முல்லைத்தீவு மாவட்டத்துக்கான போக்குவரத்துக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இதனால் முல்லைத்தீவு மாவட்டத்தில் அமைக்கப்பட்ட கொரோனா தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களில் ஏற்பட்டுள்ள குடிதண்ணீர் தட்டுப்பாட்டை தற்காலிகமாக நிவர்த்திசெய்யும் நோக்கில் மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணிப்பாளர் யாட்சன் பிகிராடோ, ஒன்றரை லீற்றர் கொள்ளளவுள்ள ஆயிரத்து 500 குடிதண்ணீர் போத்தல்களை முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தில் வைத்து முல்லைத்தீவு மாவட்டச் உதவிசெயலர் எல்.கேஜிதாவிடம் கையளித்தார். (த-213)

# முல்லையில் தனிமைப்படுத்தப்பட்டுள்ள 11 கிராமங்கள் தொடர்ந்தும் முடக்கம்

## ஏனையவற்றை விடுவிக்க பரிந்துரை

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளில் 11 கிராமங்கள் தவிர்ந்த சில கிராமங்களை விடுவிக்குமாறு பிராந்திய சுகாதார பணிமனையினர் பரிந்துரை செய்துள்ளனர்.

இந்தப் பரிந்துரை கொவிட் செயலணி, முல்லைத்தீவு படை அதிகாரி, முல்லைத்தீவு மாவட்டச் செயலர் மற்றும் மாகாண சுகாதார பணிமனை ஆகிய இடங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் மு.உமாசங்கர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்; புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவில் 9 கிராம அலுவலர் பிரிவுகளும், முள்ளியவளை பொலிஸ் பிரிவில் 2 கிராம அலுவலர் பிரிவுகளும் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகள் கடந்த 20ஆம் திகதி இரவு முதல் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை தெரிவித்துள்ளது.

புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தேவிபுரம், புதுக்குடியிருப்பு மேற்கு, புதுக்குடியிருப்பு கிழக்கு, மந்துவில், மல்லிகைத்தீவு, கோம்பாவில், உடையார்கட்டு வடக்கு, உடையார்கட்டு தெற்கு, வள்ளிபுனம் அகிய கிராமங்களும், முள்ளிவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட முள்ளியவளை மேற்கு, முள்ளியவளை வடக்கு ஆகிய கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய கிராம அலுவலர் பிரிவுகளும் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்க சிபாரிசு செய்யப்பட்டுள்ளன - என்றார். (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இணையவழிக் கட்டணங்களை மாணவர்களுக்கு இலவசமாக்குக

## தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 22**

**தற்போதுள்ள சூழ்நிலையில் பாடசாலைகள் இயங்காததால், மாணவர்களுக்காக செலவு செய்யப்படும் பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளது எனவே மாணவர்களின் கற்றலுக்கான இணையவழிக் கட்டணங்களை இலவசமாக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.**

அந்தக் கோரிக்கை கடிதத்தில் மேலும் உள்ளதாவது;


நாட்டில் தற்போதுள்ள அபாயகரமான சூழல் மிகவும் பாரதூரமானது. இது இக்கால சந்ததிக்கு மட்டுமன்றி எதிர்கால சந்ததிக்கும் பாரதூரமான விளைவை உண்டு பண்ணக்கூடியது. இத்தகைய முடக்க மற்றும் தொற்று மற்றும் மரணச் சூழலில் மாணவர்களின் கல்வி கேள்விக்குறியாகியுள்ளது. கல்வி அமைச்சும், கல்வித் திணைக்களங்களும், பாடசாலை அதிபர்களும், ஆசிரியர்களும் உலக வழிமுறைகளுக்கூடாக புதிய தொழிநுட்பங்களைக் கையாண்டு கல்வியைப் புகட்ட எடுக்கும் முயற்சி பாராட்டப்பட வேண்டியது.

ஆனால் அந்த வழிமுறைகள் எமது நாட்டில் தோற்றுப்போகும் அபாய நிலை உருவாகியுள்ளது. காரணம் நாட்டில் உள்ள பாடசாலை மாணவர்களில் 43 வீதமான மாணவர்களின் பெற்றோர் மட்டுமே நிரந்தர வருமானத்தைப் பெறுபவர்கள். அவர்களின் பெற்றோருக்கு கல்விக்கான பணச் செலவு ஓரளவு ஈடுசெய்யக்கூடியது. ஆனால் 57வீதமான மாணவர்களின் பெற்றோர் நிரந்தர வருமானமற்றவர்கள். அவர்கள் தமது ஜீவனோபாயத்துக்கே வழியில்லாத சூழல் இப்போது உருவாகியுள்ளது. இந்நிலையில் தமது பிள்ளைகளுக்கான கல்வியை மேம்படுத்த அல்லது கொண்டுசெல்ல மாற்று வழிதெரியாது திகைத்து நிற்கின்றனர். தற்போது உருவாக்கப்பட்டுள்ள இணையவழிக் கற்கைக்கு பெருமளவு பணம் தேவைப்படுகின்றது. இணையவழியை பெற்றுக் கொள்ள பெறுமதியான தொலைபேசி அல்லது கணிணி தேவைப்படுகின்றது. கல்வி அமைச்சின் சூம் மூலமான அல்லது இணைய வழிமூலமான கல்விச் செயற்பாடு 50 வீதத்துக்கு மேற்பட்ட மாணவர்களுக்கு கிடைக்க வாய்ப்பில்லாமல் போகின்றது. இதனை தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் இணையவழி செயற்பாடுகளூடாக அறியமுடிகின்றது.

ஆகையால் தயவு செய்து தற்போதுள்ள சூழ்நிலையில் பாடசாலைகள் இயங்கவில்லை. மாணவர்களுக்காக செலவு செய்யப்படும் பணம் மீதப்படுத்தப்பட்டுள்ளதால். மாணவர்களின் கற்றலுக்கான இணையவழிக் கட்டணங்களை இலவசமாக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

அத்தோடு அவர்களுக்காக சூம் வகுப்புகளை நடத்துகின்ற ஆசிரியர்களுக்கும் டேற்றாக்களை வழங்க வேண்டும் என கேட்டுக் கொள்கின்றோம்- என்றுள்ளது. (ப)

# தென்மராட்சியில் இதுவரை 248 பேர் தொற்றால் பாதிப்பு



சாவகச்சேரி, மே 22

தென்மராட்சி பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் வரை 248 பேர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த மார்ச் 20 ஆம் திகதி தொடக்கம் நேற்றுமுன்தினம் வரை காய்ச்சலால் பீடிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பெற வந்திருந்த 629 பேருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனையில் 3 கர்ப்பிணிகள் உட்பட 31 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டது. இதேவேளை சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தால் மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர். பரிசோதனையில் 217 பேருக்குத் தொற்று உறுதிசெய்யப்பட்டுள்ளது. (ப-9)

# யாழில் 7,251 குடும்பங்களுக்கு 10,000 ரூபா உணவுப் பொதிகள்

## மாவட்டச் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 22

யாழில் 7ஆயிரத்து 251 தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார்

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் யாழ்ப்பாண மாவட்டத்தைப் பொறுத்தவரை தொற்றாளர்களுடன் தொடர்புகளைப் பேணி தொற்றாளர்களுடன் நடமாடியதன் அடிப்படையில் சுகாதாரப் பிரிவினரின் அறிவுறுத்தலுக்கு அமைய வீடுகளில் சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு அரசால் வழங்கப்படும் இடைக்கால நிவாரண உதவியாக இந்த 10 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவுப் பொதிகளை மாவட்ட செயலகத்தின் வழிகாட்டுதலின் கீழ் பிரதேச செயலகங்கள் ஊடாக வழங்கி வருகின்றோம். அதன் அடிப்படையில் யாழ். மாவட்டத்தில் இன்று வரை சுமார் 7ஆயிரத்து 251 குடும்பங்களுக்கு 10 ஆயிரம் ரூபா பெறுமதி கொண்ட உணவுப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. தொடர்ச்சியாக பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு இந்த உதவி வழங்கப்பட்டு வருகின்றது - என்றார். (ப-26)

# தொற்றுக்குள்ளான பெண்ணின் குடும்பம் உணவு தவிர்ப்பு போர்

## கிளிநொச்சியில் சம்பவம்

கிளிநொச்சி, மே 22

கிளிநொச்சி அறிவியல் நகர்ப் பகுதியில் உள்ள விடியல் ஆடைத் தொழிற்சாலையின் முன்பாக மூன்று சிறுவர்களும் அவர்களின் தந்தையும் நேற்று முன்தினம் உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர். குறித்த தொழிற்சாலையில் மேற்கொள்ளப்பட்ட அன்டிஜென் பரிசோதனையில் தொற்றாளர்களாக 24 பேர் அடையாளம் காணப்பட்டிருந்தனர். அவ்வாறு அடையாளம் காணப்பட்டவர்களில் ஒருவரின் பிள்ளைகளும் கணவனுமே போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். கிளிநொச்சி அக்கராயன் மணியங்குளத்திதைச் சேர்ந்த தன்னுடைய மனைவிக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று சொல்லப்படுகின்ற போதிலும் தனக்கு குறித்த தகவல் அறிவிக்கப்படவில்லை என்றும் குழந்தைகளை வைத்துக்கொண்டு தாம் பல்வேறு நெருக்கடிகளை சந்திக்க நேர்கிறது என்றும் தெரிவித்து, போராட்டத்தில் ஈடுபடுகிறோம் என்று தொற்றுக்குள்ளான பெண்ணின் கணவன் தெரிவித்தார்.

தற்போது உள்ள சூழலில் பணிக்குச் செல்ல வேண்டாம் என கடந்த சில நாள்களுக்கு முன்னரே தனது மனைவிக்கு தெரிவித்தேன் எனவும் எனினும், தொழிற்சாலை ஊழியர்களால் நம்பிக்கையூட்டப்பட்டே மனைவி பணிக்கு அமர்த்தப்பட்டார் என்றும் தெரிவித்தார். போராட்டத்தில் ஈடுபட்ட கணவருடன், ஆடைத் தொழிற்சாலை நிர்வாகத்தினர் பேச்சில் ஈடுபட்டனர். எனினும் அவரது மனைவியின் தொலைபேசி உரையாடலின் பின்னரே போராட்டம் முடிவுக்கு வந்தது. குறித்த பெண் குணமடைந்து திரும்பும்வரை குடும்பத்துக்கான உதவிகளை வழங்குகிறோம் எனவும் தொழிற்சாலை நிர்வாகம் உறுதியளித்துள்ளது. (ப-6)





# வவுனியாவில் 12 கிராம அலுவலர் பிரிவுகள் ஆபத்தானவையாகக் கணிப்பு

## பிராந்திய தொற்றுநோயியலாளர் மருத்துவர் சுட்டிக்காட்டு

வவுனியா,மே.22

வவுனியாவில் 12 கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படவுள்ளது என்று வவுனியா பிராந்திய தொற்றுநோயியலாளர் மருத்துவர் லவன் தெரிவித்தார். வவுனியாவில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்று நோயின் சமகால நிலவரம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம் பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில், வவுனியா மாவட்டத்தில் வவு [illegible] பிரிவு அதிகமான மக்கள் தொகையைக் கொண்டமைந்துள்ளது. இதனால் அந்தப் பகுதியில் தொற்று அதிகரிக்கும் ஆபத்தான நிலைமை உள்ளது. அந்தவகையில் வவுனியா பிரதேசசெயலக பிரிவில் அதிகமக்கள் தொகையைக் கொண்ட 12 கிராம அலுவலர் பிரிவுகள் தொடர்பாக நாம் விசேட கவனம் செலுத்திவருகின்றோம். அத்துடன் இறப்புக்களை தவிர்ப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் நாம் செய்திருக்கின்றோம். இதேவேளை 152 [illegible] இருக்கின்றன. விரைவில் 200 ஒட்சிசன் வசதிகளுடன் கூடிய படுக்கை வசதிகளை ஏற்படுத்துவதற்கான செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளோம்.

குறிப்பாக அவசர சிகிச்சைப் பிரிவில் உள்ள ஒரு நோயாளரைப் பராமரிப்பதற்கு 50 ஆயிரத்திலிருந்து ஒரு லட்சம் ரூபா வரையில் ஒருநாளில் செலவாகும். கடந்த நாள்களைப் போல் அல்லாமல் எதிர் வரும் 100 நாள்களில் பரவல் விகிதம் அதிகமாக இருக்கும். அதற்கான முன்னேற்பாடுகளையும் நாம் எடுத்துள் [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணமை - நேர்மை - அஞ்சாமை

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## முடக்கமா? அடக்கமா?

இலங்கையில் கொரோனாப் பெருந்தொற்று பூதாகரமாகியுள்ளது. 100, 200 என்று இருந்த தொற்றாளர்களின் எண்ணிக்கை, டொலருக்கு நிகரான ரூபா பெறுமதிபோல் கிடுகிடுவென உயர்ந்துள்ளது. அண்மைய நாள்களில் மூவாயிரம் தொற்றாளர்கள் சராசரியாக சர்வ சாதாரணமாக அவதானிக்கப்படுகின்றனர். இப்படியான நிலையில், பகுதிநேர - தற்காலிகப் பயணத்தடை என்பதைத் தாண்டி 14 நாள்கள் பொது முடக்கம் அல்லது 14 நாள்கள் பயணத்தடை என்ற ஒன்றுக்குள் செல்ல வேண்டும் என்று அரசை நோக்கிப் பல்வேறு அழுத்தங்கள் முன்வைக்கப்படுகின்றன.

குறிப்பாக, கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் உறுப்பினரும், இராஜாங்க அமைச்சருமான சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே, 'நாட்டின் நிலை கவலைக்கிடம். 3ஆயிரத்து 500 பேர் தொற்றாளர்களாக அடையாளப்படுத்தப்படுகின்றார்கள் என்றால், இதைப் போல மூன்று மடங்கு தொற்றாளர்கள் அடையாளப் படுத்தப்படாமல் இருப்பார்கள். ஆதலால் முழுமையான முடக்கத்தை அடுத்த இரு வாரங்களுக்கு நடைமுறைப்படுத்த வேண்டும்' என்று கோரியுள்ளார். இதேவேளை துறைசார் இன்னபல சங்கங்கள் நான்கும் இதே கோரிக்கையை ஜனாதிபதியிடம் விடுத்துள்ளன. எனினும் நாட்டை முடக்கும் எண்ணமோ அல்லது நீண்ட பயணத்தடை (14 நாள்கள்) விதிக்கும் திட்டமோ அரசிடம் இல்லை என்பதையே அதன் செயற்பாடுகள் கட்டியம் செய்கின்றன.

இந்த முடக்க மறுப்புக்கு அரசு தெரிவிக்கும் ஒரே காரணம் 'பொருளாதாரம்' மட்டும்தான். அன்றாடம் உழைத்துவாழும் மக்களின் பொருளாதாரம் இந்த முடக்கத்தால் பாதிக்கப்படும் என்று அரசு தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ளக்கூடிய அதேநேரம், முடக்கவிலக்குக்கு 'அன்றாடப் பொருளாதாரத்தை சார்ந்திருப்பவர்களை' காரணிகளாக முன்வைப்பதை ஏற்றுக் கொள்ள முடியாது.

கொரோனா இலங்கைக்குப் புதியதல்ல. கடந்த வருடம் இதே காலப்பகுதியில் கொரோனா முதலாம் அலையால் இலங்கை பெரும் பின்னடைவைச் சந்தித்தது. எனவே ஒரு வரலாற்று கற்பிதமும் அனுபவமும் இலங்கைக்கு இது விடயத்தில் உள்ளது. அந்தப் படிப்பினையை முன்னுதாரணமாக்கொண்டு இந்த இரண்டாவது பேரலையை இலங்கை அணுகியிருக்க வேண்டும். வறிய மக்களுக்கு உணவுகளையும், இதர உதவிகளையும் உரிய பொறிமுறைகள் மூலம் ஏற்படுத்தியிருக்க வேண்டும். அதை இந்த அரசு தவறவிட்டுள்ளது. நெடுஞ்சாலைகளை அமைப்பதற்கும், விகாரைகளைக் கட்டுவதற்கும் இருக்கும் பொருளாதார அத்திபாரம், கொரோனா போன்ற பெருந்தொற்றில் இருந்து நாட்டு மக்களை காப்பாற்றுவதற்காக இல்லாமல் போனது அதிசயம்தான்.

பொதுமுடக்கத்தால் பொருளாதாரம் முடங்கும் என்று காரணம்கூறும் அரசு, பெருந்தொற்றாலும் அதே பொருளாதாரம்தான் முடங்கப்போகின்றது. கொரோனாக் கொத்தணிகள் மூலம் ஏற்படும் இந்தப் பொருளாதார முடக்கம், பொதுமுடக்கத்தால் ஏற்படும் பாதிப்பை விடவும் பல மடங்கு வீரியம் மிக்கதாக அமையும் என்பதை முதலில் புரிந்துகொள்ள வேண்டும்.

இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவிப்பதுபோன்று, அடையாளப்படுத்தப்படும் 3 ஆயிரம் 500 தொற்றாளர்களை விட மும்மடங்கு தொற்றாளர்கள் நாட்டின் பல பாகங்களிலும் இருப்பார்களானால், நிலைமை எவ்வளவு பாரதூரமானது என்பதை சிந்தித்துப் பாருங்கள். இதே மெத்தனப் போக்கு நீடித்தால் சராசரி தொற்றாளர்களின் எண்ணிக்கை 5 ஆயிரம், 7 ஆயிரம் என்று அதிகரித்துச் சென்றாலும் ஆச்சரியத்துக்கு ஒன்றுமில்லை. முடக்கமா அடக்கமா என்பதை அரசுதான் முடிவுசெய்ய வேண்டும்.



# நாட்டை 14 நாள்கள் முடக்குவது அவசியம்

## 4 மருத்துவ சங்கங்கள் ஆலோசனை

**கொழும்பு, மே 22**

**நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்த வேண்டுமாயின், 14 நாள்களுக்கு நாடு முழுவதும் கடும் பயணக் கட்டுப்பாடு அல்லது ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பிக்க வேண்டும். இவ்வாறு இலங்கை மருத்துவர் சங்கம், அரச மருத்துவர்கள் சங்கம் மற்றும் விசேட மருத்துவர்கள் சங்கம் ஆகியவை உட்பட நான்கு மருத்துவச் சங்கங்கள் இணைந்து இந்த ஆலோசனையை முன்வைத்துள்ளன.**



கொழும்பில் நேற்று நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன தெரிவிக்கையில்,

நாட்டில் நாளொன்றில் 3 ஆயிரம் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டால், சமூகத்தில் சுமார் 10 ஆயிரம் தொற்றாளர்கள் இருக்கக்கூடும் என்பதை நாம் உணர வேண்டும்.

கொரோனாவை உரிய வகையில் கட்டுப்படுத்தாத காரணத்தால், சில நாடுகளில் சுகாதாரக் கட்டமைப்பு விழுந்தது. அதை நோக்கியே நாம் பயணித்துக் கொண்டிருக்கின்றோம். எனவே, 14 நாள்கள் கடுமையான பயணக் கட்டுப்பாடுகளை விதித்து, நாட்டு மக்களை வீட்டுக்குள் முடக்குமாறு அரசிடம் கோரிக்கை விடுக்கின்றோம். இந்த முடிவை எடுப்பது கஷ்டம்தான். இருந்தாலும் ஒத்துழைப்பு நல்குமாறு அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் வெளிவருவதிலும் தாமதம் ஏற்பட்டுள்ளதால், கிராம சேவகர் பிரிவுகளை முடக்குவதிலும் 100 வீத பலனை எதிர் பார்க்க முடியாது. அதே போன்று 3 நாள்கள் பயணக் கட்டுப்பாடு அல்லது ஊரடங்கு உத்தரவு பிறப்பிப்பதன் மூலமும் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. தொடர் ஊரடங்கின்போது இடையில் தளர்வுசெய்வதும் ஏற்புடையதாக அமையாது. எனவே 14 நாள்களுக்கு நாடு முழுவதும் கடும் பயணக் கட்டுப்பாடுகளை அல்லது ஊரடங்கு உத்தரவை அரசு பிறப்பிக்க வேண்டும் - என்றார்.

(ம-4,44)

# அடுத்த கொத்தணிக்கு வாய்ப்பு வழங்காதீர்கள்

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு,மே 22

நாட்டில் அடுத்த கொரோனாக் கொத்தணி உருவாகுவதற்கு எவரும் இடமளிக்க வேண்டாம். அறிவிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை சரிவரக் கடைப்பிடியுங்கள் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் பொதுமக்களுக்கு எச்சரித்துள்ளது.

இது தொடர்பில் சங்கத்தின் உதவிச் செயலாளர் மருத்துவர் நவீன் டி சொய்சா தெரிவிக்கையில்,

நாட்டில் நாளாந்தம் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகரித்து வருகின்றனர். இந்தச் ... தீர்மானம் மிக்கவையாக அமைந்திருக்கும். தற்போதைய நிலைமை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்படும் வரை காத்திருக்க முடியாது. அடுத்த கொத்தணி எங்கிருந்து உருவாகும் என்றும் எமக்குத் தெரியாது.

சுகாதார அதிகாரிகளால் மாத்திரம் இந்த நிலைமையைக் கட்டுப்படுத்த முடியாது. பயணக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள போதிலும், இந்த கட்டுப்பாடுகளை மீறும் பல சம்பவங்கள் பதிவாகி வருகின்றன. எனவே மக்கள் இந்த விடயத்தில் சுய கட்டுப்பாட்டுடன் செயற்பட வேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவு.ஆடைத் தொழிற்சாலைகளிலும் தொற்று பரவல் ஏற்படும் அபாயம்

## சுகாதார மருத்துவ அதிகாரி எச்சரிக்கை

**வவுனியா,மே 22**

**வவுனியாவில் அமைந்துள்ள ஆடைத் தொழிற்சாலைகள் சுகாதாரத் தரப்பினரின் வழிகாட்டுதல்களைப் பின்பற்றத் தவறுகின்றமையால் தொற்றுப்பரவல் அதிகமாக ஏற்படுவதற்கான வாய்ப்புக்கள் உள்ளன என்று வவுனியா சுகாதார மருத்துவ அதிகாரி யூட்பீரிஸ் தெரிவித்தார்.**



வவுனியாவில் அதிகரித்து வரும் கொரோனாத் தொற்றுநோயின் சமகால நிலைவரம் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று மாவட்டச் செயலகத்தில் நேற்று இடம்பெற்றது. இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்;

பொருளாதார நோக்கம் இருப்பதால் அரசின் கொள்கையின் பிரகாரம் ஆடைத் தொழிற்சாலைகள் இயங்குகின்றன. அவற்றின் செயற்பாடுகளை நிறுத்துவதற்கான அதிகாரம் எமக்கில்லை. எனினும் தொடர்ச்சியாக ஆடைத் தொழிற்சாலைகளில் கள ஆய்வுகளை முன்னெடுத்துள் ளோம். எமது கருத்துக்களை அவர்கள் செவிமடுப்பதாகத் தெரியவில்லை. குறிப்பாக ஒமேகாலைன் ஆடைத் தொழிற்சாலையானது ஒரு கட்டத்துக்குள்ளேயே இயங்குகின்றது. 2ஆயிரத்து 500க்கும் மேற்பட்ட ஊழியர்கள் அங்கு கடமைபுரிகின்றனர். ஆடைத் தொழிற்சாலைகள் சிலநடைமுறைகளைப் பின்பற்றாதமையால் பெருமளவான தொற்றுப் பரவல் ஒன்று ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. எனவே அனைவரையும் ஒரே நேரத்தில் வேலைக்கு அழைக்காமல் வேலை நேரத்தில் சுழற்சிமுறையில் மாற்றத்தை ஏற்படுத்தி இயங்கலாம். அத்துடன் வெளிமாவட்டங்களில் உள்ள ஆடைத் தொழிற்சாலைகளில் பணிபுரிவோர் ஆன்டிஜென் பரிசோதனையை தனியார் மருத்துவமனைகளில் கட்டணம் செலுத்தி முன்னெடுக்கின்றனர். ஆனால் இங்குள்ள தொழிற்சாலைகள் அனைத்தும் சுகாதாரத் திணைக்களத்தையே சார்ந்திருக்கின்றன. நாம் இது தொடர்பாக பல முறை தெளிவூட்டல்களை வழங்கியும் அவர்கள் அதனைக் கடைப்பிடிக்கவில்லை. இது ஒரு பின்னடைவே. இது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும் என்பதைக் கூறிக் கொள்கின்றேன் - என்றார். (ப-110)

# தச்சன்குளம் காணிகள் தொடர்பில் வதந்திகள் பரப்பப்படுகின்றன

## *கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் தெரிவிப்பு*

வவுனியா.மே 22

மிளகாய் செய்கைக்காக தெரிவுசெய்யப்பட்டுள்ள வவுனியா தச்சன்குளம் காணிகள் தொடர்பாக வீண் வதந்திகள் பரப்பப்படுகின்றன என்று வவுனியா கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் என்.விஸ்னுதாசன் தெரிவித்தார்.

வவுனியா தச்சன்குளம் பகுதியில் சுழற்சிமுறையான பண்ணைத்திட்டத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ள காணிகள் தொடர்பாக தெளிவூட்டும் விதமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

எமது மாவட்டத்தில் மிளகாய்செய்கை மற்றும் அதனுடன் இணைந்தவாறு வேறு பயிர்செய்கைக்கான திட்டம் ஒன்று செயற்படுத்தப்படவுள்ளது. அத் திட்டத்துக்காக மூன்று முறிப்பு தச்சன்குளம் என்ற பகுதியில் அமைந்துள்ள மத்தியதரவர்க்க (எம்.சி.சி) காணி 5 வருடத்துக்கு தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அந்த திட்டத்துக்கான உட்கட்டுமான வளங்கள் அனைத்தும் அரசின் மானிய அடிப்படையில் செயற்படுத்தப்படவுள்ளன. மிளகாய் தேவையை பூர்த்திசெய்வதே அதன் பிரதான நோக்கம்.

அத்துடன் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு மற்றும் விவசாய அபிவிருத்தி குழு கூட்டங்கள், காணிப் பயன்பாட்டு ஆணைக்குழு ஆகியவற்றில் பேசப்பட்டு உரியவகையில் அனுமதி எடுக்கப்பட்ட பின்னரே இந்தச் செயற்பாடு இடம்பெறுகின்றது.

எனினும் குறித்த விடயம் தொடர்பாக சமூக வலைத் தளங்களில் ஒரு சிலரால் வதந்திகள் பரப்பப்பட்டு வருகின்றன. எனவே பொறுப்புள்ள அதிகாரிகள் என்ற வகையில் மக்களுக்கு தெளிவூட்ட வேண்டியவர்களாக நாம் இருக்கிறோம்.

120 ஏக்கர் காணி இதற்காக தெரிவுசெய்யப்பட்டுள்ளது. அத்துடன் குறித்த காணிகளில் தலா அரை ஏக்கர் அளவான காணிகளை 240 சமுர்த்தி குடும்பங்களுக்கு பிரித்து வழங்கவுள்ளோம். இதனால் அவர்களது வாழ்வாதாரமும் பூர்த்தியாவதுடன், அரசின் நோக்கமும் நிறைவேறும்.

அத்துடன் காணிகளின் உரிமையை மாற்றுவது தொடர்பாக எந்த விடயங்களும் இடம்பெறவில்லை. இதேவேளை அந்த காணிகளின் உரிமையாளர்களால் உரிய ஆவணங்கள் சமர்பிக்கப்பட்டால் அது விடுவிக்கப்படும் என்று நாம் தெளிவாக அறிவித்துள்ளோம்.அதில் எமக்கு எந்த ஆட்சேபனையும் இல்லை. எனவே இந்த விடயத்தில் எமக்கு எந்தவித உள்நோக்கமும் இல்லை. பிழையான தகவல்கள் மக்களுக்கு செல்லக்கூடாது - என்றார். (ஐ-110)

# ஹெரோய்னுடன் பயணத்த வாகனம் வவுனியா பொலிஸிடம் சிக்கியது

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற சோதனை நடவடிக்கையின் போது ஹெரோய்னுடன் ஐவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் ஈரட்டை வூபே பகுதியில் புத்தளத்திலிருந்து வவுனியா நோக்கி வந்த வாகனம் நேற்றுக் காலை வழிமறிக்கப்பட்டு சோதனைக்கு உட்படுத்தப்பட்டது. இதன்போது வாகனத்தில் ஹெரோய்ன் போதைப் பொருளை கடத்திசென்றுள்ளமை தெரியவந்தது. சம்பவத்தில் வவுனியா நெளுக்குளம், கற்பகபுரம், ஈச்சங்குளம், மூன்றுமுறிப்பு மற்றும் தேக்கவத்தை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அவர்கள் பயணித்த வாகனமும் மீட்கப்பட்டுள்ளது. கைது செய்யப்பட்டவர்களை விசாரணைகளின் பின்னர் நீதி மன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (ப-110)

# உப உணவுப் பயிர்கள் குரங்குகளால் பேரழிவு

## *விவசாயிகள் கவலை*

முல்லைத்தீவு, மே 22

முல்லைத்தீவு மாவட்டத்தில் உப உணவுப் பயிர்ச் செய்கைகளில் அழிவுகளை ஏற்படுத்துவதில் குரங்குகள் முதன்மை இடத்தை வகிக்கின்றன என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம், பிரதேச செயலகங்கள் மற்றும் விவசாயத் திணைக்களம் என்பவை இணைந்து பயிர்ச்செய்கைக் கூட்டங்களை நடத்தி நெற்செய்கையுடன் மேலதிகமாக உப உணவுப் பயிர்ச் செய்கையில் விவசாயிகள் ஈடுபட வேண்டும் என ஆலோசனைகள் வழங்கி, பயிர்ச் செய்கையிலும் விவசாயிகள் ஈடுபட்டு வரும் நிலையில், இரவு வேளைகளில் யானைகளும், பகல் வேளையில் குரங்குகளின் தொல்லையையும் விவசாயிகள் எதிர்கொண்டு வருகின்றனர். கிராமங்களில் இருந்து தூர இடங்களுக்கு குரங்குகளையும் யானைகளையும் கலைத்து விடுவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என மாவட்ட, பிரதேச செயலகங்களில் நடைபெறுகின்ற கூட்டங்களில் விவசாயிகளால் தொடர்ச்சியாக கோரிக்கைகள் விடுக்கப்பட்டு வரும் நிலையிலும், வனஜீவராசிகள் திணைக்களம் தகுந்த நடவடிக்கைகள் எடுப்பதில்லை என்ற குற்றச்சாட்டுகள் விவசாயிகளால் முன்வைக்கப்படுகின்றன.

குரங்குகளைக் கட்டுப்படுத்துவதற்கு வனஜீவராசிகள் திணைக்களம் தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என குரங்குகளால் பயிர் அழிவுகளை எதிர்கொண்டுள்ள விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ப-13)



# வடக்கு ஊடகவியலாளர்களுக்கு மட்டுமே பொலிஸ் அடக்குமுறை

## *வவு.தமிழ் ஊடகவியலாளர் சங்கம் கண்டனம்*

வவுனியா, மே 22


வவுனியாவில் முள்ளிவாய்க்கால் ஆத்மசாந்திப் பூசை நிகழ்வை செய்தி சேகரிக்கச்சென்ற ஊடகவியலாளர்களுடன் வவுனியா பொலிஸார் நடந்துகொண்ட விதம் கண்டணத்துக்குரியது என்று வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார் அனுப்பிவைத்துள்ள செய்திக்குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இறுதிப்போரில் உயிரிழந்த பொது மக்களுக்கான ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு கடந்த 18 ஆம் திகதி வவுனியா குட்செட் வீதி கருமாரி அம்மன் கோவிலில் இடம் பெற்றது. குறித்த நிகழ்வை செய்தி ஊடகவியலாளர்களுடன் வவுனியா பொலிஸார் கடுமையாக முரண்பட்டுள்ளனர். அரச தகவல் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள ஊடக அடையாள அட்டையை பொலிஸாரிடம், ஊடகவியலாளர்கள் காண்பித்தபோதும், அதனை பார்க்கமறுத்த பொலிஸார் தேசிய அடையாள அட்டையை காண்பிக்குமாறு அச்சுறுத்தியதுடன் ஊடகவியலாளர்களும் அடையாள அட்டையின் இறுதி இலக்கத்தின் அடிப்படையிலேயே வெளியில் வர முடியும் என்று கடுமையாகத் தெரிவித்துள்ளனர். இது தமிழ் ஊடகவியலாளர்கள் மீதும், ஊடகத்துறை மீதுமான அடக்குமுறையின் வெளிப்பாடாகவே பார்க்க முடியும். குறிப்பாக கொவிட்19 பரவல் நிலை தடையின்றி தமது பணிகளை செய்வதற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது. எனவே அரசின் நடைமுறைச் சட்டத்தை அறிந்துகொள்ளாத பொலிஸார் ஊடகவியலாளர்களுடன் முரண்பட்டுள்ளமை ஏற்கமுடியாத செயல். அத்துடன் குறித்த சம்பவத்தின் மூலம் தென்பகுதியில் ஒரு நடைமுறையும் வடக்கில் பிறிதொரு நடை முறையும் பொலிஸார் கடைப் பிடிப்பதாகவே பார்க்க முடிவதுடன், இலங்கை அரச தகவல்திணைக்களத்தால் வழங்கப்பட்ட ஊடக அடையாள அட்டையையும் அவர்கள் மலினப்படுத்தியுள்ளனர். எனவே மிலேச்சத்தனமான இவ்வாறான சம்பவங்களுக்கு வவுனியா தமிழ் ஊடகவியலாளர் சங்கம் வன்மையான கண்டனங்களை தெரிவித்துக்கொள்கின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உருமாறிய வைரஸ்க்கள் இதுவரை 3 அடையாளம்



**கொழும்பு, மே 22**

**உலகில் மிக அபாயமிக்கவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 3 வைரஸ்க்கள் இலங்கையில் இதுவரை இனங்காணப்பட்டுள்ளன என்று நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் மூலக்கூறு மருத்துவ நிபுணர் பேராசிரியர் நீலிகா மலவிகே தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், உலகில் மிக அபாயமிக்கவையாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள 4 உருமாறிய வைரஸ்க்கள், பிரிட்டன், தென்னாபிரிக்கா, பிரேஸில் மற்றும் இந்தியா ஆகிய நாடுகளில் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்த வைரஸ்க்கள் ஏனைய வைரஸ்க்களை விட வேகமாகப் பரவும் தன்மை கொண்டவை. இதன்மூலம் ஏற்படும் பாதிப்புகளும், உயிரிழப்புக்களும் அதிகரிக்கும். தடுப்பூசி செலுத்திக்கொண்டவர்களுக்கும் பாதிப்புகளை ஏற்படுத்தும். இலங்கையில் 3 வைரஸ்க்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. எனவே, அத்தியாவசியத் தேவைகளுக்காக அன்றி, வேறு எந்தக் காரணங்களுக்காகவும் மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வதைத் தவிர்த்துக் கொள்வது அவசியம்- என்றார். (ம-4)



## தடுப்பூசிக்கு காத்திருக்காது பரவலைக் கட்டுப்படுத்துங்கள்

*அரசிடம் ரணில் கோரிக்கை*

கொழும்பு, மே 22

இலங்கைக்குள் கொரோனாத் தொற்றுப் பரவல் உக்கிரமடைந்துள்ள நிலையில், இதற்கான தடுப்பூசிகளுக்குக் காத்திருந்து காலத்தை வீணடிக்காது, தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும்.

இவ்வாறு முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்த வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக. சுமார் ஒரு மாதம் இங்கிலாந்து முடக்கப்பட்டிருந்தது. ஒருவரின் உடலுக்குள் கொரோனா வைரஸ் ஊடுருவி, அது இன்னுமொருவருக்குத் தொற்றும். எனவே இரண்டு வாரக் காலப்பகுதியேனும், நாட்டை முழுமையாக மூட நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என்று கூறி, நாட்டை முடக்காமல் வைத்திருப்பதால், எந்தப் பயனும் இல்லை. ஏற்கனவே இந்த நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளது. எனவே மக்களின் உயிருக்கு முக்கியத்துவமளித்து உரிய நடவடிக்கைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் - என்றார். (ம-4)

## கொரோனாவால் 40 வயதுக்குட்பட்ட 44 பேர் உயிரிழப்பு

கொழும்பு.மே 22

கொரோனாத் தொற்றால் 40 வயதுக்கும் குறைவான 44 பேர் நேற்று வரை உயிரிழந்துள்ளனர் என்று கோவிட்-19 தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அதற்கமைவாக 9 வயதுக்கிடைப்பட்ட இருவரும், 10 தொடக்கம் 30 வயதுக்கிடைப்பட்ட 12 பேரும், 31 தொடக்கம் 40 வயதுக்கிடைப்பட்ட 30 பேரும் கொரோனாவால் உயிரிழந்துள்ளனர். அத்துடன் 41 தொடக்கம் 50 வயதுக்கிடைப்பட்ட 78 பேரும், 51 தொடக்கம் 60 வயதுக்கிடைப்பட்ட 152 பேரும், 61 தொடக்கம் 70 வயதுக்கிடைப்பட்ட 290 பேரும், 70 வயதுக்கும் மேற்பட்ட 510 பேரும் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

முதலாவது அலையின் போது 13 பேர் மட்டுமே உயிரிழந்திருந்தனர். 2 மற்றும் 3ஆம் அலைகளின் போதே அதிகளவு உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4,44)

## கொரோனா பயங்கரத்தை அரசு எதிர்பார்க்கவில்லை

*இப்படிச் சொல்கிறார் வாசுதேவ*



கொழும்பு, மே 22

நாட்டில் கொரோனாத் தொற்றுப் பரவலானது இந்தளவு பயங்கரமான நிலைமையை ஏற்படுத்தும் என்று அரசு ஒருபோதும் நினைக்கவில்லை என்று நீர் வளத்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

'சூம்' தொழில் நுட்பம் மூலம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனா முதலாவது சுற்றுப் போல் இந்தத் தடவையும் தொற்றுப் பரவல் ஓரளவு தணிந்துவிடும் என்றே அரசு மதிப்பிட்டது. ஆனால் நாம் எதிர்பார்த்ததை விட பயங்கரமான நிலையில் அது நாட்டுக்குள் வியாபித்து விட்டது.

எதிர்பாராத வகையில் பாதிப்புக்கள் அதிகமாகி வருகின்றன. இதனால் மருத்துவமனைகளில் இடநெருக்கடி நிலவுகின்றது. அதனால் அறிகுறிகள் அற்ற தொற்றாளர்களை வீடுகளில் தங்கவைத்து சிகிச்சை யளிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது-என்றார். (ம-4)

## பரிசோதனைக்கான கட்டணங்களுக்கு கட்டுப்பாடு

கொழும்பு, மே 22

கொரோனாத் தொற்றுக்கான பி.சி.ஆர். மற்றும் அன்டிஜென் பரிசோதனைகளுக்கான கட்டணங்களுக்குக் கட்டுப்பாடு விதிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக உரிய கட்டண நிர்ணயம் விரைவில் அறிவிக்கப்படும் என்று நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனைகளுக்கான கட்டணங்களை நிர்ணயிப்பது தொடர்பான பேச்சுக்கள் உரிய தரப்பினருடன் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ம-4)

## 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி

*அவசியம் என்கிறார் மருத்துவர் பெரேரா*

கொழும்பு, மே 22

12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றுவது கட்டாயம் என்று குழந்தை மருத்துவ விசேட நிபுணர் மருத்துவர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

கொரோனாத் தொற்றால் அதிகளவு சிறுவர்கள் பாதிக்கப்பட்டு வரும் நிலையில் தொற்றிலிருந்து அவர்களைப் பாதுகாப்பதற்கு தடுப்பூசி அவசியம் என்று தீபால் பெரேரா சுட்டிக்காட்டினார்.

கொரோனாத் தொற்றால் தற்போது ஆயிரம் சிறுவர்கள் வரையில் பாதிக்கப்பட்டுள்ளனர் எனவும் 5 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் தீபால் பெரேரா குறிப்பிடுகின்றார்.



கொரோனாவின் மூன்றாவது அலை காரணமாக பெற்றோர் நோய்க் காவிகளாக மாறுகின்றனர். அவர்கள் ஊடாக சிறுவர்களுக்கு அதிகளவில் தொற்று ஏற்படுகின்றது.

இதைத் தவிர்ப்பதற்கு சிறுவர்களுக்கு தடுப்பூசி ஏற்றுவது அவசியம் என்று

World Health Organization

## உருமாறிய வைரஸ்களையும் தடுப்பூசிகளால் கட்டுப்படுத்தலாம்

*உலக சுகாதார ஸ்தாபனம் அறிவிப்பு*

கொழும்பு, மே 22

உலக சுகாதார ஸ்தாபனத்தால் அனுமதிக்கப்பட்டுள்ள கொரோனாத் தடுப்பூசிகளால், உருமாறிய கொரோனா வைரஸ்களைக் கட்டுப்படுத்த முடியும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் அறிவித்துள்ளது.

இந்தியாவில் உருமாறியுள்ள கொரோனா வைரஸ் உள்ளிட்ட, உலக நாடுகளில் கண்டறியப்பட்டுள்ள உருமாறிய கொரோனா வைரஸ்கள் அனைத்தையும் கட்டுப்படுத்தக்கூடிய திறமை, உலக சுகாதார ஸ்தாபனம் பரிந்துரைத்துள்ள தடுப்பூசிகளுக்கு உண்டு.

எனவே இயன்றவரை தடுப்பூசிகளைச் செலுத்தி வைரஸிலிருந்து பாதுகாத்துக்கொள்ளுங்கள் என்றும் உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளது. (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள்களின் விலை உயர்வு; அமைச்சரவை துணைக்குழு கவனம்

**கொழும்பு, மே 22**

**2019 மற்றும் 2020 ஆகிய ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் உலக சந்தையில் எரிபொருள் விலை வேகமாக அதிகரித்து வருகின்றமை தொடர்பில் அமைச்சரவை துணைக்குழுவில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.**

மண்ணெண்ணெய் மானியத்தை பூர்த்தி செய்தல், கச்சா எண்ணெய்க்கான துறைமுகங்கள் மற்றும் விமான நிலைய மேம்பாட்டு வரி (பிஏஎல்) திருத்தம் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிதிப் பிரச்சினைகள் குறித்து நியமிக்கப்பட்ட அமைச்சரவை துணைக்குழுவின் மூன்றாவது விவாதம் நேற்றுமுன்தினம் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் இடம்பெற்றது.

உலக சந்தையில் எரிபொருள் விலை 2019-2020 ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2021 இல் இதுவரை பெருமளவில் அதிகரித்துள்ளதைக் கவனத்தில் கொண்டு தறபோதைய சூழ்நிலைக்கு மத்தியில் மக்கள் நிவாரணத்தைப் பேணுவது குறித்து இதன்போது அமைச்சர்கள் தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். மின்சார சபை உள்ளிட்ட பல அரச நிறுவனங்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு இதுவரை 2019ஆம் ஆண்டுக்கான கடன் தொகையையே மீளச் செலுத்தி வருகின்றன என இதன்போது வெளிப்படுத்தப்பட்டது.

கடந்த ஆண்டு நிதி அமைச்சு தலையீடு செய்து எரிபொருள் விலையை உறுதிப்படுத்தியதன் மூலம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு ரூபா 50 பில்லியன் ரூபா செலுத்தப்பட்டுள்ள போதிலும், மேலும் 79 பில்லியன் ரூபா கடன் தொகை செலுத்தப்பட வேண்டி உள்ளது என்பது தெரியவந்தது.

அதன்படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தினசரி இழப்பு கணிசமாக அதிகரித்துள்ளது.

மக்களுக்கு நிவாரணம் வழங்கும் நடவடிக்கையில் மின் அலகொன்றை பாவனையாளர்களுக்கு வழங்குவதற்காக இலங்கை மின்சார சபை இதுவரை சுமார் 10 ரூபா நட்டத்தை எதிர்நோக்குகின்றது என்று அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். (ப)



## ரயில் சேவைகள் இடைநிறுத்தம்

கொழும்பு, மே 22

நாடளாவிய ரீதியில் நடைமுறையில் உள்ள பயணத்தடை காரணமாக நேற்று நள்ளிரவு முதல் ரயில் சேவைகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

எதிர்வரும் 27ஆம் திகதி நள்ளிரவு வரை பயணிகள் ரயில் சேவைகள் இடம்பெறாது என்று ரயில்வே திணைக்களம் அறிவித்துள்ளது.

கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (ம-4)

## உதய ஹெட்டியாராச்சி பணியிலிருந்து ஓய்வு!

கொழும்பு, மே 22

35 ஆண்டுகளாக கடற்படையில் சேவையாற்றிய, ரியர் அட்மிரல் உதய ஹெட்டியாராச்சி ஓய்வுபெற்றுள்ளார்.

தனது 55 ஆவது பிறந்த நாளை நேற்றுமுன்தினம் கொண்டாடிய அதிகாரிக்கு, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் நிஷாந்த உலுகேதென்ன உட்பட பணிப்பாளர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். அதனைத் தொடர்ந்து கடற்படை சம்பிரதாய முறைப்படி, அவருக்கு பிரியாவிடை வழங்கினர்.

1986ஆம் ஆண்டில் கடற்படையில் சேர்ந்த ரியர் அட்மிரல் உதய ஹெட்டியாராச்சி தனது பதவிக் காலத்தில் பல முக்கிய பொறுப்புக்களையும், பதவிகளையும் வகித்துள்ளார். (ம-4)

## தேர்தல் மறுசீரமைப்புக்கு மக்கள் அபிப்பிராயம் கோரல்

### ஜூன் 19க்கு முன்னர் அனுப்பலாம்

கொழும்பு, மே 22

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் மற்றும் இவற்றுடன் தொடர்பான ஏனைய விடயங்கள் குறித்த யோசனைகள், முன்மொழிவுகளை எதிர்வரும் ஜூன் 19ஆம் திகதிக்கு முன்னர் எழுத்துமூலம் அனுப்பி வைக்குமாறு நாடாளுமன்ற விசேட குழு பொது மக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமை தொடர்பாக பொருத்தமான சீர்திருத்தங்களை அடையாளம் காண்பதற்கும் தேவையான திருத்தங்களைப் பரிந்துரைப்பதற்கும் நியமிக்கப்பட்ட விசேட நாடாளுமன்ற குழு அதன் தலைவர் சபை முதல்வரும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்த்தனவின் தலைமையில் கடந்த 17ஆம் திகதி கூடிய போது பொதுமக்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ள தீர்மானிக்கப்பட்டது. இதற்கமைய குறித்த குழுவில் யோசனைகளை முன்வைப்பதற்கு எதிர்பார்க்கும் பொதுமக்கள் மற்றும் ஏனைய ஆர்வமுள்ள அமைப்புக்கள் தமது முன்மொழிவுகளை தபால் மூலம் அல்லது sec.pscelectionreforms2021@parliament.lkஎன்ற மின்னஞ்சல் முகவரியின் ஊடாக அனுப்பிவைக்க முடியும் என கோரப்பட்டுள்ளது. முன்மொழிவுகள் மற்றும் யோசனைகளை அனுப்பிவைக்க விரும்புவோர் செயலாளர், நாடாளுமன்ற விசேட குழு, இலங்கை நாடாளுமன்றம், ஸ்ரீ ஜயவர்த்தனபுர கோட்டை என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

## சஹ்ரான் தலைமையில் போதனை வகுப்புக்கள்

### இதுவரை 7 பேர் கைது

திருமலை, மே 22

உயிர்த்த ஞாயிறுதினக் குண்டுத்தாக்குதலின் பிரதான சூத்திரதாரி சஹ்ரான் ஹாசீம் தலைமையில் மத போதனை வகுப்புக்களை நடத்திய குற்றச்சாட்டில் இது வரை 7 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அத்துடன் மூதூர் மற்றும் ஒலுவில் பகுதிகளில் அடிப்படைவாத வகுப்புகளை நடத்திய குற்றச்சாட்டில் நேற்று முன்தினமும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இவரும் சஹ்ரான் ஹாசீமின் தலைமையில் கடந்த 2018ஆம் ஆண்டு குறித்த பகுதிகளில் வகுப்புகளை நடத்தியுள்ளார். சந்தேகநபர் மாவனெல்ல, ஹெம்மத்தாகமப் பகுதியைச் சேர்ந்தவர். அவருக்கு வயது 29 என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (ம-4)

## பாதிக்கப்பட்ட அனைவருக்கும் ரூ. 5 ஆயிரம் நிவாரணப்பொதி

கொழும்பு, மே 22

கொரோனாத் தொற்றால் முடக்கப்பட்டப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கும், வெள்ள இடரால் பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்களில் உள்ளவர்களுக்கும், 5 ஆயிரம் ரூபா பெறுமதியான நிவாரணப் பொதி இலவசமாக வழங்கப்படவுள்ளது என்று வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும், அந்தந்தப் பிரதேச செயலகங்களூடாக இந்த நிவாரணப் பொதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பணத்துக்குப் பதிலாகவே நிவாரணப் பொதி வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்கள் பொருள்களைக் கொள்வனவு செய்து அவற்றை, மக்களுக்கு இலவசமாக வழங்கும்.

சந்தைகளில் தற்போது காணப்படும் பொருள்களின் விலைகளை விட குறைவான விலைக்கு, சதொச ஊடாகவே இந்த நிவாரணப் பொதி வழங்கப்படும்.

வெள்ளை நாட்டரிசி 10 கிலோகிராம், சிவப்பரிசி 5 கிலோகிராம், கோதுமை மா 3 கிலோகிராம், நூடில்ஸ் 1 கிலோகிராம், பருப்பு 2 கிலோகிராம், சீனி 2 கிலோகிராம், தேயிலை 200 கிராம், சோயமீட், மிளகாய்த்தூள், பிஸ்கட்டுகள், முகக்கவசங்கள் 10 மற்றும் தொற்று நீக்கி ஆகியவை உள்ளிட்ட பொருள்கள் இந்தப் பொதிக்குள் உள்ளடக்கப்படும் - என்றார். (ம-4)

## கதிரியக்கவியலாளர்கள் 18 பேருக்கு கொரோனா

கொழும்பு, மே 22

அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் 18 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளதால், தொற்றிலிருந்து பாதுகாப்புப்பெற உரிய வசதிகள் செய்து கொடுக்கப்பட வேண்டும் என்று கோரி, தொழிற்சங்க போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இது தொடர்பில் அரச கதிரியக்க தொழில்நுட்பவியலாளர்கள் சங்கத்தின் பிரதம செயலாளர் தர்மகீர்த்தி தெரிவிக்கையில்,

நாடு முழுவதிலும் 18 பேர் தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் 14 பேர் தேசிய மருத்துவமனையில் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர். தொற்றுக்கு உள்ளானவர்களுக்கு தனியான விடுதி வழங்க வேண்டும். அல்லது அவர்கள் வீடுகளில் சிகிச்சைபெற வசதி ஏற்படுத்தப்பட வேண்டும்.

ஒரு நோயாளியேனும் எமது தொழிற்சங்கப் போராட்டத்தால் இறக்கக்கூடாது என்பதைக் கருத்தில் கொண்டே எமது தொழிற்சங்கப் போராட்டம் முன்னெடுக்கப்படுகின்றது. எமது அங்கத்தவர்களுக்கு கொவிட் காலத்தில் கிடைக்க வேண்டிய சலுகைகள் கிடைப்பதில்லை. அதனால் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம் - என்றார். (ம-4)

## பிணை வழங்கலுக்கு புதிய வழிகாட்டுதல்

கொழும்பு, மே 22

குற்றம் சாட்டப்பட்டவர்களுக்குப் பிணை வழங்குவது தொடர்பான ஏற்பாடுகள் திருத்தப்பட்டு, புதிய வழிகாட்டுதல் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

சிறைச்சாலை மற்றும் நீதி அமைச்சின் செயலாளர் மற்றும் சிறைச்சாலை ஆணையாளரின் வேண்டுகோளின் பேரில் இந்தப் புதிய வழிகாட்டுதல் சட்டமா அதிபரால் திருத்தப்பட்டுள்ளது.

நாடு முழுவதும் தற்போது வேகமாகப் பரவி வரும் கொரோனாத் தொற்று நிலைமையைக் கருத்தில் கொண்டு சிறைகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியை குறைக்கும் நோக்கில் [illegible] (ம-4)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கொழும்பு துறைமுக நகர சட்ட வரைவுக்கு எதிர்ப்பு

## ஐ.ம.சக்தியினர் போராட்டம்

**கொழும்பு,மே 22**

**கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவுக்கு எதிர்ப்பு தெரிவித்து, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியினர் நேற்று முன்தினம் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.**



நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள், சட்ட வரைவின் பிரதிகளைத் தீ வைத்து கொளுத்தி எதிர்ப்புத் தெரிவித்தனர். அத்துடன், சட்ட வரைவை அரசு மீளப்பெற வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இது தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவிக்கையில்,

"இந்தச் சட்ட வரைவு நிறைவேறும் பட்சத்தில் எதிர்காலத்தில் எமது ஆட்சியின் போது அது நிச்சயம் திருத்தப்படும். நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு மற்றும் அரசியல் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வகையில் நடவடிக்கை முன்னெடுக்கப்படும். கொழும்பு துறைமுக நகர திட்டத்தை எமது நாட்டுக்கு சாதகமான முறையில் மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்." என்றார். அதேவேளை தற்போதைய சூழ்நிலையில் இவ்வாறு எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபடக்கூடாது என்று தெரிவித்து , போராட்டத்தை நிறுத்துவதற்கு பொலிஸார் முற்பட்டனர். எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (ஏ-4,44)

# மங்கள சமரவீர சிறந்த நடிகர்

## நாமல் பாராட்டு

கொழும்பு, மே 22

மிகச் சிறந்த மூலோபாய அரசியல் சாணக்கியம் கொண்ட நபராகத் திகழ்ந்த முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர, இன்று சிறந்த நடிகராகவும் தன்னை அடையாளப்படுத்தியுள்ளார்.

இவ்வாறு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் நாமல் ராஜபக்ச பாராட்டியுள்ளார்.

வஸ்தி எனும் தயாரிப்பு நிறுவனத்தின் புதிய வீடியோக் காட்சியில், அரசன் வேடத்தில் முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர நடித்துள்ளமை தொடர்பில், ஊடகங்கள் மற்றும் சமூக வலைத்தளங்களில் பரவலாக விமர்சிக்கப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில், நாமல் தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ளதாவது,

'இலங்கையில் காணப்படும் மிகச் சிறந்த மூலோபாய அரசியல் சாணக்கியம் கொண்ட நபராகவே, இது வரை நான் உங்களைப் பார்த்திருக்கிறேன்.

இறுதிக் காலத்தில் மாறுபட்ட அரசியல் கொள்கைகள் காணப்பட்டாலும், அரசியலைத் தவிர்த்துப் பார்க்குமிடத்து, நீங்கள் இப்படியொரு சிறந்த நடிகராக இருப்பீர்கள் என்று நான் எண்ணிப் பார்த்திருக்கவில்லை' என்றுள்ளார். (ம-4)

# ரூ.11 மில்லியன் பணம் மோசடி

## இருவர் கைது

கொழும்பு, மே 22

அலைபேசிகள் விற்பனை எனும் போர்வையில் 11 மில்லியன் ரூபாவுக்கும் அதிகமான பணத்தை மோசடி செய்தனர் என்ற குற்றச்சாட்டில் சந்தேகநபர்கள் இருவர் கொள்ளுப்பிட்டியில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சந்தேகநபர்களுக்கு எதிராக கொள்ளுப்பிட்டி பொலிஸ் நிலையத்தில் 70 முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனையடுத்து அவர்களது வர்த்தக நிலையத்தைச் சுற்றிவளைத்த பொலிஸார் இருவரையும் கைதுசெய்துள்ளனர். (ம-4)

# நாமலுக்கு முன்னர் சஜித்தே ஜனாதிபதி

## ஹர்ஷ எம்.பி. தெரிவிப்பு



கொழும்பு, மே 22

அமைச்சர் நாமல் ராஜபக்சவை ஜனாதிபதியாக்கும் திட்டம் சரிவராது.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஜனாதியாக வந்த பின்னரே, அவரால் ஜனாதிபதியாக முடியும்.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்ட வரைவு மீதான முதல் நாள் விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த ராஜபக்ச, கோத்தாபய ராஜபக்சவைத் தொடர்ந்து, நாமல் ராஜபக்சவை ஜனாதிபதியாக்க, ராஜபக்ச குடும்பத்தினரால் முயற்சிக்கப்படுகின்றது.

ஜனாதிபதியாக நாமல் ராஜபக்சவால் வர முடியும். ஆனால் அதற்கு முன்னர் சஜித் பிரேமதாஸவே ஜனாதிபதியாகத் தெரிவு செய்யப்படுவார். சஜித்துக்கு பின்னரே நாமல் ஜனாதிபதியாவார்- என்றார். (ஏ-4)

# சிறிலங்கா விரைவில் சீலங்காவாக மாறும்!

## சாணக்கியன் எம்.பி. தெரிவிப்பு

கொழும்பு, மே 22

கொழும்பு துறைமுக நகரத்தை சீனாவுக்கு தாரை வார்த்துள்ளதன் மூலம், இலங்கையை சீனா விரைவில் கைப்பற்றும் இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

துறைமுக நகர சட்ட வரைவு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

உலகின் பல்வேறு நாடுகளுக்கு நுழைந்துள்ள சீனா, அந்தந்த நாடுகளில் உள்ள தொழிற்றுறைகளைக் கைப்பற்றிவிட்டது. இந்தநிலையில், இலங்கைக்கு உள்ள அமைவிடத்தையே தற்போது கைப்பற்றப் பார்க்கின்றது. மாகாண சபைகளுக்கூடாக அதிகாரங்களைப் பிரித்துக் கேட்கும் தமிழர்களைப் புலிகள் என்கின்றனர். இஸ்லாமியர்களை அடிப்படைவாதிகள் என்கின்றனர். ஆனால், சீனாவுக்கு மாத்திரம் நாட்டை வழங்கியுள்ளனர். அதனை சீழம் என்றே கூறவேண்டும். இதனூடாக நாட்டின் அனைத்துப் பாகங்களையும் சீனா கைப்பற்றும். சிறிலங்கா, சீலங்காவாக மாறும் - என்றார். (4)

# ஒரே குடும்பத்தில் அறுவருக்கு தொற்று


கொழும்பு, மே 22

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 6 பேர் கொரோனாத் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அம்பகமுவ சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட லக்ஸபான - மொரஹேனகமப் பகுதியில், தனிமைப்படுத்தலில் இருந்தவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இவர்களுக்குத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. குறித்த தொற்றாளர்களில் 2 மற்றும் 5 வயதான சிறுவர்களும் உள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# கண்டி ஒப்பந்தத்தை விடவும் மிகப்பெரிய காட்டிக்கொடுப்பு

## எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டு



கொழும்பு,மே 22

1815 ஆம் ஆண்டில் செய்துகொள்ளப்பட்ட கண்டி ஒப்பந்தத்தை விடவும் மிகப்பெரியதொரு காட்டிக்கொடுப்பே, கொழும்பு துறைமுக நகர சட்ட வரைவு.

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்றுமுன்தினம் 2 ஆவது நாளாக நடைபெற்ற விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தச் சட்டவரைவு நாட்டின் இறையாண்மை, ஆட்புல ஒருமைப்பாடு, ஒற்றையாட்சி மற்றும் அரசியல் சுதந்திரம் ஆகியவற்றுக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்துள்ளது. அரசமைப்பை மீறியே இது தயாரிக்கப்பட்டுள்ளது. உயர்நீதி மன்ற தீர்ப்பு மூலம் அது உறுதியாகின்றது.

நாட்டைப் பாதுகாப்போம், தேசத்துரோகிகளை விரட்டி, தேசப்பற்றாளர்களாக செயற்படுவோம் எனக்கூறியே தற்போதைய அரசு ஆட்சிக்கு வந்தது. ஆனால் இன்று என்ன நடக்கின்றது? ஒரு சட்ட வரைவு ஊடாக நாடு காட்டிக்கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, அவசர அவசரமாக இதனை நிறைவேற்றாது, தற்காலிகமாகப் பிற்போடுமாறு அரசிடம் கேட்டுக்கொள்கின்றோம். அனைத்து விதமான பணிகளும் அரசமைப்பின் பிரகாரமே இடம்பெற வேண்டும். அதனைவிடுத்து [illegible]

காக நாட்டையும், மக்களையும் காட்டிக் கொடுக்க முடியாது. 1815 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட கண்டி ஒப்பந்தத்தை விடவும் மிகப்பெரியதொரு காட்டிக் கொடுப்பே இந்தச் சட்ட வரைவு எனவே, நாட்டுக்கு தீங்கு விளைவிக்கக்கூடிய இதனை ஆதரிக்க வேண்டாம், மனச்சாட்சியின் பிரகாரம் செயற்படுமாறு கேட்டுக் கொள்கின்றோம்." - என்றார். (4,44)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் ஏற்றிச் சென்ற வாகனத்தின்மீது துப்பாக்கிச் சூடு

## மூவர் தப்பி ஓட்டம்; முட்கம்பிக்குள் சிக்கிய ஒருவர் கைது

**வடமராட்சி, மே 22**

**வடமராட்சி கிழக்கு, குடத்தனையில் மணல் கடத்தலில் ஈடுபட்ட கும்பல் பயணித்த ஹன்ரர் வாகனத்துக்கு சிறப்பு அதிரடிப் படையினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் வாகனம் விபத்துக்குள்ளாகியுள்ளது.**



அதில் பயணித்த மூவர் தப்பித்த நிலையில் ஒருவர் முட்கம்பிக்குள் சிக்குண்ட நிலையில் கைதுசெய்யப்பட்டுள்ளார்.
இந்தச் சம்பவம் நேற்று இடம்பெற்றது.
சம்பவத்தில் துன்னாலையைச் சேர்ந்த ஒருவரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.
தப்பித்தவர்களைக் கைது செய்யும் நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். அத்துடன், சட்டவிரோதமாக மணல் அகழ்வில் ஈடுபட்டு அதனைக் கடத்த பயன்படுத்தப்பட்ட ஹன்ரர் வாகனம் பொலிஸாரால் மீட்கப்பட் டுள்ளது.
மணலை ஏற்றியவாறு வந்த ஹன்ரர் வாகனத்தை சிறப்பு அதிரடிப் படையினர் மறித்துள்ளனர். எனினும் குறித்த வாகனம் கட்டளையை மீறி பயணித்ததால் வாகனத்தின் சில்லுக்கு சிறப்பு அதிரடிப் படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தினர்.
அதனால் ரயர் வெடித்து கட்டுப்பாட்டையிழந்த ஹன்ரர் மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானது என்று தெரிவிக்கப்படுகிறது. (ப-26)



# யாழ்ப்பாணம் – கிளிநொச்சிக்கு மேலதிக பஸ் சேவை வேண்டும்

## பயணிகள் கோரிக்கை

சாவகச்சேரி. மே 22
யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரையான மேலதிக பஸ் சேவைகளை நடத்துமாறு பொதுமக்களும், அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோரும் கோரியுள்ளனர்.
இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கை யில்;
மாகாணங்களுக்கிடையிலான பஸ் சேவைகள் தற்காலிகமாக நிறுத்தப்பட்டதால் ஏ-9 வீதியில். போதிய பஸ் சேவைகள் நடைபெறுவதில்லை. இதனால் அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரிவோர் பஸ்ஸை எதிர்பார்த்து நீண்ட நேரம் காத்திருக்க வேண்டியுள்ளது.
தூர இடங்களுக்கான பஸ் சேவைகள் நடைபெற்ற வேளையில் குறைந்தது பத்து நிமிடங்களுக்கு ஒன்று என்ற ரீதியில் அரச மற்றும் தனியார் பஸ்கள் சேவையில் ஈடுபட்டமையால் நாம் சிரமங்களை எதிர்நோக்கவில்லை.
தற்போது மாகாணங்களுக்கிடையிலான பஸ் சேவைகள் நிறுத்தப்பட்டதால் எமது கடமைகளுக்கு உரிய நேரத்தில் செல்ல முடியவில்லை.
எனவே மாகாணங்களுக்கிடையிலான பஸ் சேவைகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் வரை யாழ்ப்பாணத்திலிருந்து கிளிநொச்சி வரையான மேலதிக பஸ் சேவைகளை நடத்தவேண்டும் என்று சம்பந்தப்பட்டவர்களைக் கேட்டுக்கொள்கிறோம் - என்றனர். (ப-9)

# மின்தடை

யாழ்ப்பாணம், மே 22
உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று சனிக்கிழமை 8 மணியிலிருந்து மாலை 5 மணிவரை **யாழ். மாவட்டத்தில்** அட்டகிரி, மூத்தவிநாயகர் கோவிலடி, நவாலி, கலையரசி வீதி, சென்ட் பீட்டர்ஸ் வீதி, வேலக்கை பிள்ளையார் கோவிலடி, சந்நிதி கோவில், தொண்டமனாறு ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி மாவட்டத்தில்** வற்றாப்பளை, நாவற்காடு முள்ளியவளை, முள்ளியவளை கலைமகள் பாடசாலையடி, முள்ளியவளை பொலிஸ் நிலையத்தடி, பளப்பாணி முறிப்பு . பிலாக்குடியிருப்பு, பொன்னகர் முள்ளியவளை , பூதன்வயல், செங்குந்தா வீதி, தண்ணீரூற்று (கனுக்கேணி), தண்ணிமுறிப்பு , முள்ளியவளை மூன்றாம் வட்டாரம், வற்றாப்பளை சந்தி, வற்றாப்பளை கோவில் ஆகிய இடங்களிலும், **வவுனியா மாவட்டத்தில்** குருக்கள் புதுக்குளம் மணியர்குளம், 1வது குறுக்குத் தெரு, ஒஸ்ரியாஸ்ரூடியோ, பஜார் வீதி, ஹொரவபொத்தானை வீதி, இலுப்பையடி சந்தி, கந்தசாமி கோவில் வீதி, குகன் மோட்டார்கள், 2 வது குறுக்கு தெரு, மில் வீதி சந்தி, பொலிஸ் நிலையம், பஸார் வீதி, இறம்பைக்குளம், சூசைப்பிள்ளை யார்குளம் ஆகிய பிரதேசங்களிலும்,
நாளை 23.05.2021 ஞாயிறு காலை 8.30 மணியிலிருந்து மாலை 5மணி வரை **யாழ். மாவட்டத்திரல்** சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை, சாவகச்சேரி நீதிமன்ற வளாகம், அரசடி, மருதடி, ஆசிரியர் வீதி சந்தி, சாவகச்சேரி நகரம், சாவகச்சேரி பிரதேச செயலகம், டச்சு வீதி, கண்டுவில், கச்சாய் வீதி, கல்வயல் துர்க்கை அம்மன் கோவில் பிரதேசம், மீனாட்சி அம்மன் கோவில் சங்கத்தானை, நுணாவில், நுணாவில் வைரவர் கோவில் பிரதேசம், பெருங்குளம் சந்தி சாவகச்சேரி, தபால் அலுவலகம் சந்தி சாவகச்சேரி, புகையிரத நிலைய வீதி, பிரிட்டிஷ் கவுன்சில் ரக்கா வீதி , றியோ கிரீம் ஹவுஸ், அரசடி பழம் வீதி சந்தி, கைலாச பிள்ளையார் கோவில், நல்லூர் கோயில், நாவலர் வீதி இராசாவின் தோட்டம், பருத்தித்துறை வீதி, ரக்கா வீதி சுண்டிக்குளி, இராமநாதன் வீதி புகையிரத குறுக்கு சந்தி ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நவீன வசதிகளுடன் சிறுவர் பூங்கா மானிப்பாயில் விரைவில் அமையும்

## தவிசாளர் ஜெபநேசன் தெரிவிப்பு

மானிப்பாய், மே 22
வலி. தென்மேற்கு பிரதேச சபைக்குட்பட்ட வகையில் எல்.டி.எஸ்.பி திட்டத்தின கீழ் வடக்கில் முன்னுதாரணமான நவீன வடிவிலான பல்நோக்கு வசதி கொண்ட சிறுவர் பூங்கா அமைக்கப்பட்டு வருகின்றது.
இப்பூங்கா எதிர்வரும் நவம்பர் மாதம் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது என்று வலி. தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் அ. ஜெபநேசன் தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;
சுமார் 35 மில்லியன் ரூபா செலவில் மானிப்பாயில் அமைக்கப்படும் இச்சிறுவர் பூங்கா சிறுவர் மனதைக்கவரும் விளையாட்டு உபகரணங்கள், நவீன தரம் கொண்டதும் சிறுவர் மகிழ் உள்ளக விளையாட்டுக்கள், சிமாட் வசதிகளுடன் கூடிய இரு மாடிக்கட்டடங்கள், சிறியவர் முதல் முதியோர் வரை சிறுவர் நிகழ்வை கண்டுகளிக்கக்கூடிய இருக்கைகள், இயற்கை பூங்காக் கள் மற்றும் நவீன கன்ரின் வசதிகள் கொண்டவையாக வடக்கில் முன்னுதாரண மான சிறுவர் பூங்காவாக இது அமையவுள்ளது.
மக்கள் பங்கேற்புத் திட்டத்தின் மூலம் முன்னுரிமைத் தெரிவில் சபைக்கு வருமானத்தை ஈட்டித் தரக்கூடிய முன்னோக்குத் திட்டத்தை வலி. தென்மேற்கு மக்கள் தெரிவு செய்துள்ளனர்- என்றார். (ப-50)

# கேரளக் கஞ்சாவுடன் நேற்று மன்னாரில் ஒருவர் கைது

மன்னார்,மே 22
மன்னார் பேசாலை காட்டாஸ்பத்திரியில் 5 கிலோ 575 கிராம் கேரளக் கஞ்சாவுடன், சந்தேகத்தில் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.
மன்னார் மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பண்டுள்ளவீரசிங்கவின் பணிப்பில், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் கஸ்தூரி ஆராய்ச்சி, மற்றும் பேசாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பி.பொ.ப. சோமயித், பி.பொ.ப.இந்திக்க, உ.பொ. ப.விவேகாணந், உ.பொ.ப.ஆனந்த ஆகியோர் தலைமையிலான அணியினரே மேற்படி கேரளக் கஞ்சாவை நேற்று முன் தினம் கைப்பற்றியுள்ளனர். இதனை உடமையில் வைத்திருந்தார் என்ற சந்தேகத்தில், காட்டாஸ்பத்திரியைச் சேர்ந்த ஒருவரையும்

**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.**

**சந்தைகள், இறைச்சிக்கடைகளினை குத்தகைக்கு வழங்குவதற்கான**

**இடைக்கால மீள் கேள்வி திறத்தல் திகதி மாற்றம் தொடர்பான பகிரங்க அறிவித்தல் - 2021.**

அரசினால் வெளியிடப்பட்ட EST-6/03/LEA/3381 இலக்க, 18.05.2021 ஆம் திகதிய விசேட விடுமுறை தின சுற்றறிக்கமைவாக, சபையினால் கீழ்க் குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2021 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலத்திற்கு (01.06.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி திறத்தல் திகதியானது **28.05.2021 (வெள்ளிக்கிழமை) பிற்பகல் 02.00** என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதனை பகிரங்கமாக அறியத்தருகின்றேன்.

**தியாகராஜா நிரோகஷ்**
**தவிசாளர்**
**வலிகாமம் கிழக்கு பிரதேச சபை**
**புத்தூர்,**
**2021.05.22.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பயணக்....
இவ்வாறு அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர்கள் சந்திப்பின்போது அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன இது தொடர்பில் தெரிவிக்கையில்:

கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால் சுகாதாரக் கட்டமைப்பு பெரும் சவாலை எதிர்கொண்டுள்ளது. அரச மருத்துவமனைகளில் தொற்றாளர்கள் நிரம்பியுள்ளனர். அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைபெற்று வருகின்றனர். இதனால் ஏனைய நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதிலும் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது. சமூகத்தில் மேலும் பல தொற்றாளர்கள் இருக்கலாம். எனவே, தற்போது நடைமுறையில் உள்ள மாகாணங்களுக்கு இடையிலான பயணத்தடை, தேசிய அடையாள அட்டை முறைமை மற்றும் மூன்று நாள்கள் குறுகிய பயணக் கட்டுப்பாடு போன்றவற்றால் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது. இதன் காரணமாகவே 14 நாள்களுக்கு கடும் பயணக் கட்டுப்பாடுகளை அல்லது ஊரடங்கைப் பிறப்பிக்குமாறு கேட்கின்றோம். அதன்பின்னர் நிலைமையை மீளாய்வு செய்து கட்டம் கட்டமாக ஊரடங்கைத் தளர்த்தலாம்- என்று தெரிவித்தார். (த-இ)

## மூச்சுவிட...
முன்தினம் வியாழக்கிழமை இரவு இடம்பெற்றுள்ளது.

கைதடியைச் சேர்ந்த 6 வயதுடைய லயந்தினி என்ற சிறுமியே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சடலம் சாவகச்சேரி ஆதார மருத்துவமனையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

சடலத்தில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ப-159)

## பலாலி....
கிராமம் அங்குள்ள 199 குடும்பங்களுடன் தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று யாழ். மாவட்டச் செயலர் க.மகேசன் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

**நேற்று மட்டும் 52**

யாழ்.மாவட்டத்தில் இறுதியாகக் கிடைத்த பி.சி.ஆர். பரிசோதனை முடிவின்படி நேற்றையதினம் (நேற்றுமுன்தினம்) 52 நபர்களுக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. கடந்த ஐந்து நாள்களாக தொற்று உறுதி செய்யப்பட்டவர்களின் எண்ணிக்கை 50க்கும் மேற்பட்டதாகக் காணப்படுகின்றது.

அதேநேரம், மொத்தமாக 2 ஆயிரத்து 277 நபர்களுக்கு ஒக்ரோபர் மாதத்துக்குப் பின்னர் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலைமை காணப்படுகின்றது.

இன்றும் (நேற்று) ஒரு கொரோனா இறப்பு யாழ்ப்பாண மாவட்டத்தில் பதிவாகியுள்ளது. மாவட்டத்தில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்துள்ளது.

**யாழில் 5,249 பேர் தனிமை**

ஏற்கனவே தனிமைப்படுத்தப்பட்டிருந்த கொடிகாமம் பிரதேசம் விடுவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் தற்போதைய நிலையில் 2 ஆயிரத்து 123 குடும்பங்களைச் சேர்ந்த 5 ஆயிரத்து 249 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ள

வழங்கும் நடவடிக்கைகள் தேசிய ரீதியில் முன்னுரிமை அடிப்படையில் அந்தந்த மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றன. எனவே யாழ்ப்பாண மாவட்டத்தில் சுகாதாரப் பிரிவினருக்கு முதல் கட்டமாக தடுப்பூசி வழங்கியிருக்கின்றோம். எங்களுடைய கோரிக்கையின் அடிப்படையில் உள்நாட்டலுவல்கள் அமைச்சு எமது மாவட்டத்தில் தடுப்பூசி வழங்கப்படவேண்டியோர் எண்ணிக்கை பற்றிய விவரத்தைக் கோரியுள்ளது.

அதனை நாங்கள் அனுப்பியிருக்கிறோம். அதனடிப்படையிலே யாழ்ப்பாண மாவட்டத்தில் சகல பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்டச் செயலகம் உட்பட சகல திணைக்கள அலுவலர்களுமாக 3 ஆயிரத்து 100க்கும் மேற்பட்டோருக்குத் தடுப்பூசி வழங்க வேண்டும். மிக விரைவில் அந்தக் கோரிக்கை நிறைவேற்றப்படும் - என்றார். (த.ப-26)

## தொடர் முடக்கம்....
துள்ளார்.

எதிர்வரும் ஜூன் மாதம் முதலாம் திகதி முதல் 14 நாள்கள் நாடு முற்றாக முடக்கப்படும் என்று அண்மைக்காலமாக தகவல்கள் வெளிவரும் நிலையில், அவர் இந்தப் பதிலை வழங்கியுள்ளார்.

அதேவேளை நாட்டை இரண்டு வாரங்களுக்கு முடக்குமாறு, இராஜாங்க அமைச்சர் மருத்துவர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொழும்பு உட்பட நாட்டின் பல பகுதிகளில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துவரும் நிலையில் அவர் இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

இதனிடையே நாடு முழுவதையும் 14 நாள்களுக்கு முடக்குமாறு, இலங்கை மருத்துவர் சங்கத்தின் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் பத்மா குணரத்ன, அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளார். (ம-4.22)

## பயணக்....
பாடு விதிக்கப்பட்டாலும், மக்களுக்கும் பொருளாதாரத்துக்கும் பாதிப்பு ஏற்படாதிருக்கவேண்டும் என்று கூறிய ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச, அவற்றுக்காகப் பல தீர்மானங்களை மேற்கொண்டுள்ளார் என்று அவரது ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

கொவிட் ஒழிப்பு ஜனாதிபதி செயலணியுடன் ஜனாதிபதி அலுவலகத்தில் நேற்று முற்பகல் நடைபெற்ற கலந்துரையாடலின்போது அதற்காக எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அமைச்சர்கள் மற்றும் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி விளக்கினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:

பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் காலப்பகுதியில் தொழிற்சாலைகளை தொடர்ச்சியாக நடத்திச் செல்லுதல், மருந்தகங்களை திறந்து வைத்தல், பேக்கரி உற்பத்திகளை தொடர்ச்சியாக மேற்கொள்ளுதல் மற்றும் விநியோகிப்பதற்கு முறைமையொன்றை வகுத்தல் மட்டுமன்றி கப்பல் பொருள்களை விநியோகிக்கும் நிறுவனங்களை திறந்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

பிரதேச ரீதியாக நடமாடும் சேவைகளை மேற்கொண்டு எவ்வித தட்டுப்பாடும் இன்றி அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மக்களுக்கு விநியோகிக்கப்படவேண்டும் என்று பணித்துள்

கொண்டுவரப்பட்டு அரசுடைமையாக்கப்பட்டுள்ள அத்தியாவசிய நுகர்வுப் பொருள்களை சதொச நிறுவனத்துக்கு வழங்குவதற்கும், நாடு முழுவதும் உள்ள சதொச களஞ்சியசாலைகளில் மேற்கொள்ளப்படும் பொருள் பொதியிடல்வேலைகளுக்கு ஒரு லட்சம் தொழில் வாய்ப்பு நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஆள் சேர்ப்புச் செய்யப்பட்டவர்களை பயன்படுத்துவதற்கும் பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருள்களை விநியோகிப்பதற்காக பிரதேச செயலர்களின் ஊடாக தேவையான அனுமதிப் பத்திரங்களை வழங்குவதற்கும், வீதித் தடை நடவடிக்கைகளை இலகுபடுத்துவதற்கு பொலிஸ் மற்றும் இராணுவத்தினரை பயன்படுத்துவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

பொருளாதார மத்திய நிலையங்கள் திறக்கப்படும் நாளுக்கு முந்திய தினம் பொருள்களைக் கொண்டுசெல்வதற்காக அனுமதியளித்தல், விவசாய நடவடிக்கைகள், அனைத்து நகரங்களிலும் குப்பைகளை அகற்றுதல் உள்ளிட்ட நாளாந்த சுத்திகரிப்பு நடவடிக்கைகள், வீதி அபிவிருத்தி மற்றும் ஏனைய நிர்மாணப் பணிகளை முன்னெடுத்தல் போன்றவற்றுக்கும் இந்த பயணக் கட்டுப்பாட்டை தடையாக எடுத்துக் கொள்ளக் கூடாது என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளும் அரச அல்லது தனியார் நிறுவனங்கள் பரிசோதனை பெறுபேறுகளின்படி தொற்றாளர்களை இனம்காணும் பட்சத்தில் குறித்த தொற்றாளருக்கு சிகிச்சையளிக்கும் பொறுப்பை அந்த நிறுவனத்துக்கே நேரடியாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் ஜனாதிபதி சுகாதார அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

**ஆயுள்வேத முறையையும் பயன்படுத்தத் தீர்மானம்**

தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் போது ஆயுர்வேத வைத்தியசாலை முறைமை வசதிகளையும் பயன்படுத்த தீர்மானிக்கப்பட்டது.

மே மாதம் 25 மற்றும் 28 ஆகிய இரு தினங்களிலும் பயணக் கட்டுப்பாடு நீக்கப்பட்டாலும் மக்களுக்கு வீட்டிலிருந்து வெளியில் செல்வதற்கு அனுமதி வழங்கப்படுவது அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக மட்டுமேயாகும்.

**அதிகாரிகள் பயமுறுத்துகின்றனரா?**

அரச அதிகாரிகள் மற்றும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் தேவையற்ற விதத்தில் ஊடகங்களில் மட்டும் வந்து மக்களை பயமுறுத்துவதற்கு பதிலாக ஏதேனும் விடயங்கள் இருந்தால் அது பற்றி நேரடியாக தனக்கு தெரிவிப்பது மிகவும் முக்கியம் என்று ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இதுவரை தீர்மானிக்கப்பட்டதும், இதன் பின்னர் தீர்மானிக்கப்படுவதும் சம்பந்தப்பட்ட விசேட நிபுணர்களின் ஆலோசனையின் பிரகாரமே ஆகும். என்றும் ஜனாதிபதி தெரிவித்துள்ளார். (த)

## நேற்றும்...
காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத்

எண்ணிக்கை ஒரு லட்சத்து 58 ஆயிரத்து 324 ஆக எகிறியுள்ளது.

கொரோனாத் தொற்றுக் காரணமாக மருத்துவமனைகள் மற்றும் தனிமைப்படுத்தல் மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 31 ஆயிரத்து 875 ஆக அதிகரித்துள்ளது.

அத்தோடு கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்து 25 ஆயிரத்து 360 ஆக உயர்வடைந்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (த-22)

## முள்ளிவாய்க்கால்..
கப்பட்டு தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டனர். சம்மதம் தெரிவித்தனர். எனினும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் கஜேந்திரன் ஆகிய இருவரும் கையொப்பமிடவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. குறித்த ஆவணத்தை அனுப்புவதில் தமக்கு உடன்பாடு இல்லை என்பதால், அதில் கையொப்பமிடவில்லை என்று அவர்கள் கூறியுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி கடந்த 12 விசமிகளால் உடைத்து சேதமாக்கப்பட்டது. இராணுவ மற்றும் பொலிஸ் பாதுகாப்பில் இருந்த தூபி உடைக்கப்பட்டதற்கு அரசே பொறுப்பேற்க வேண்டும் என்று தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கண்டனம் வெளியிட்டிருந்தனர்.

இந்த நிலையில், குறித்த கடிதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் கையொப்பமிட்டனர். இந்தக் கடிதம் ஐ.நாவுக்கான இலங்கை வதிவிடப் பிரதிநிதி ஹனா சிங்கர் மூலமாக ஐ.நா. மனித உரிமை உயர்ஸ்தானிகருக்கு ஆவணப்படுத்தக் கோரி அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

அந்தக் கடிதத்தில், "2009 மே 18 இல் முடிவடைந்த கொடிய யுத்தத்தில் கொல்லப்பட்ட தமிழ் மக்களை நினைவுகூருமுகமாக முள்ளிவாய்க்காலில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி அண்மையில் அரச படையினரால் உடைத்து சேதமாக்கப்பட்டுள்ளமை, உயிரிழந்த மக்களை நினைவுகூரும் உரிமையை அவமதிப்பதாகவே உள்ளது.

இராணுவத்தின் இந்தச் செயற்பாடு வெட்கக்கேடான மனித குலத்துக்கு எதிரான செயற்பாடு.

உலகில் உள்ள வலிமை பொருந்திய இந்தஊர் இராணுவமும் சின்னங்களை அழித்தாலும் மக்கள் மனதில் இருக்கும் சம்பவங்களையும் நினைவுகளையும் அழிக்க முடியாது.

இந்த காட்டுமிராண்டித்தனமான செயலை ஆத்திரத்துடனும், மனவேதனையுடனும், விரக்தியுடனும் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாகிய நாம் பதிவு செய்கிறோம்.

நினைவேந்தல்கள் தொடர்பாக அண்மையில் ஐ.நாவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்துக்கும் மனித உரிமைக்கும் எதிரான இந்த விடயத்தை ஆவணப்படுத்துமாறு கேட்டுக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 80 பேருக்கு...

பேரின் மாதிரிகள் நேற்று பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. அவர்களில் 80 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

அதன்படி, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 41 பேரும் கிளிநொச்சி மாவட்டத்தில் 25 பேரும் வவுனியா மாவட்டத்தில் 6 பேரும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6 பேரும் மன்னார் மாவட்டத்தில் இருவர் என 80 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட இருவருக்கு கொரோனாத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் இருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. புதுக்குடியிருப்பு சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

வவுனியா பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 6 பேருக்கு கொரோனாத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டது.

கிளிநொச்சியின் கரைச்சி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்கும் கண்டாவளை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 6 பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

தருமபுரம் பிரதேச மருத்துவமனையில் இருவருக்கும் பளை பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் பூநகரி பிரதேச மருத்துவமனையில் ஒருவருக்கும் பூநகரி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்கும் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சேர்க்கப்பட்ட 4 பேருக்கு கொவிட்-19 நோய்த்தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட 7 பேருக்கும் மானிப்பாய் பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட மூவருக்கும் சங்கானை மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட ஒருவருக்கும் கொவிட் 19 தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

உடுவில் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 5 பேருக்கும் கரவெட்டி சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்கும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவருக்கும் கொரோனாத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. சண்டிலிப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் நால்வருக்குத் தொற்று உள்ளமை உறுதிப்படுத்தப்பட்டது. அவர்கள் நால்வரும் காக்கைதீவு மீன் சந்தையில் எழுமாறாக முன்னெடுக்கப்பட்ட பரிசோதனையில் கண்டறியப்பட்டனர்.

சங்கானை சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் 10 பேருக்குத் தொற்றுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது. அவர்களில் மூவர் ஆயுர்வேத வைத்தியசாலை பணியாளர்கள். மூவரும் மருந்தகம் ஒன்றின் 3 பணியாளர்களும், வீதி சீரமைப்பு பணியாளர் ஒருவரும் உள்ளடங்குகின்றனர்.

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஒருவருக்குத் தொற்று உள்ளமை கண்டறியப்

## வங்காள....

யம் காணப்படுகிறது என்றும் வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதனால் நேற்றுமுன்தினம் தொடக்கம் மறுஅறிவித்தல் வரை இந்தக் கடற் பிரதேசத்தில் கடற்றொழில் நடவடிக்கைகளில் அல்லது கடல் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்றும் திணைக்களம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த பிரதேசத்தில் மீன்பிடிக்கச் சென்றுள்ள மீனவர்கள் மற்றும் கடல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளோர் பாதுகாப்பான இடங்களை நோக்கி செல்லுமாறு திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

இதேவேளை, வடக்கில் முல்லைத்தீவு மாவட்டம் உட்பட, ஹம்பாந்தோட்டை மாவட்டம் மற்றும் மத்திய, சப்ரகமுவ, ஊவா, கிழக்கு மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகிறது என்று வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் சில இடங்களில் 50 மில்லிமீற்றருக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகிறது.

மேல் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சிறிதளவில் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அந்தப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். (த-இ)

## பருத்தித்துறையில்...

6 மணிக்கு பின்னர் யாழ்ப்பாணக் குடாநாட்டின் பல்வேறு இடங்களிலும் மழை வீழ்ச்சி பதிவாகியது. அதனடிப்படையில் யாழ்ப்பாணத்தில் 16.5 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், பருத்தித்துறையில் 144 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும், சாவகச்சேரியில் 90.8 மில்லிமீற்றர் மழை வீழ்ச்சியும் பதிவாகியுள்ளது என்று பிரதீபன் தெரிவித்தார்.

அதுமட்டுமன்றி, எதிர்வரும் மூன்று நாள்களுக்கு யாழ்ப்பாண மாவட்டத்தில் மழையுடன் கூடிய காலநிலை நிலவும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது என்றும் பிரதீபன் மேலும் தெரிவித்தார். (த-20)

## நேற்றிரவு....

துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை அதிகாலை 4 மணி வரை இது நடைமுறையில் இருக்கும். மீண்டும் அதே நாள் இரவு 11 மணிக்கு நடைமுறைக்கு வரும் பயணத் தடைக் கட்டுப்பாடு 28ஆம் திகதி வரை நீடிக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கடந்த பயணத் தடையின்போது, யாழ்ப்பாணம் உட்பட வடக்கில் கிராமங்களில் கடைகள் பலவும் திறந்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டதோடு, இந்தமுறை அது சாத்தியப்படாது என்றும் சுகாதாரத் தரப்பினர் கூறுகின்றனர்.

வருவதனால், பயணக்கட்டுப்பாடுகளை, சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை உள்ளது என்றும் சுகாதாரத் தரப்பினர் கூறுகின்றனர். எனவே, பொதுமக்கள் இயன்றளவு வீடு களுக்குள்ளேயே இருங்கள் என்றும் சுகாதாரத் தரப்பினர் கோரிக்கை விடுக்கின்றனர். (த)

## முல்லை....

பற்று பிரதேச சபைத் தவிசாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

கடந்த காலங்களில் ஆடைத் தொழிற்சாலையில் கொரோனாத் தொற்று ஏற்பட்டபோது அதனை மூடுவதற்கு அதன் நிர்வாகம் சரியான முடிவை எடுக்கவில்லை. அரசும், அதற்கான சரியான அழுத்தத்தைக் கொடுக்கவில்லை. கடந்த காலங்களில் முள்ளிவாய்க்கால் நினைவு நிகழ்வைத் தடுக்கின்ற நோக்கோடு கொரோனா தொற்றுவதற்கான வாய்ப்பு இருக்கின்றது என்று பல்வேறு காரணங்களை அடிப்படையாகக் கொண்டு நீதிமன்றம் வரை சென்ற அரசு, ஆடைத் தொழிற்சாலைகளின் இவ்வாறான செயற்பாட்டை இடை நிறுத்துவதற்கான முயற்சி எடுக்கவில்லை. உயர் அரச அதிகாரிகளின் அசமந்தப்போக்கும் இதற்குக் காரணம். கிளிநொச்சி மற்றும் வவுனியா ஆகிய பகுதிகளிலுள்ள ஆடைத் தொழிற்சாலைகள் இன்றும் இயங்கிவருகின்றன. பல நூற்றுக்கணக்கான பெண்கள் அங்கு வேலை செய்கின்றார்கள். ஆடைத் தொழிற்சாலைகளை மூடி மக்களைப் பாதுகாக்கின்ற முயற்சி போதுமானதாக இல்லை.

இவ்வாறு செல்லுமாக இருந்தால் இந்தப் பகுதியில் பல லட்சக்கணக்கான கொரோனாத் தொற்றாளர்களை சுமக்கவேண்டிய நிலையும், பல ஆயிரக்கணக்கானவர்களை இழக்கவேண்டிய நிலையும் உருவாகும். அரசிடமும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளிடமும் நாம் கேட்டுக்கொள்வது, இந்த ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக இடைநிறுத்தி பெறுமதிமிக்க உயிர்களைக் காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதே.

இதேவேளை, கரைதுறைப்பற்று பிரதேசத்துக்கு உட்பட்ட கிராமங்கள் முடக்கப்பட்டுள்ளன. கொரோனாத் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. மக்களின் பொருளாதாரம் மிகவும் மோசமான நிலையில் இருக்கின்றது. எனவே தனிமைப்படுத்தப்படுகின்ற, முடக்கப்படுகின்ற காலங்களில் அரசு உடனடியாக அவர்களுக்கு வறுமையைக் குறைக்கின்ற வகையில் உணவுப் பொதிகளை வழங்குகின்ற சரியான பொறிமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்-என்றார். (ப19)

## கொரோனாத்...

ளுக்கும் அதிகாரிகளுக்கும் சுகாதார அமைச்சின் செயலாளர் ஓர் எச்சரிக்கைக் கடிதத்தை அனுப்பியுள்ளார். அவ்வாறு தகவல்களை வழங்கும் அனைத்து நபர்களுக்கும் எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. கொவிட் 19 தொற்றுநோய்

காலகட்டத்தில் பொதுமக்களின் தகவல் அறியும் உரிமையை நிராகரிப்பதோடு தொற்றுநோய்த் தகவல்களை மறைக்க அதிகாரிகள் மேற்கொண்டுள்ள முயற்சியை சுதந்திர ஊடக இயக்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

இது தொடர்பில் அந்த இயக்கம் அனுப்பிய செய்திக் குறிப்பில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:

இத்தகைய எச்சரிக்கைகள், அதிகாரிகள் தங்கள் கருத்துக்களை வெளிப்படுத்தும் உரிமையைத் தடுப்பதுடன், பல்வேறு ஆதாரங்களிலிருந்து தகவல்களைப் பெறுவதற்கான ஊடகங்களுக்கு வழங்கப்பட்ட உரிமையையும் மீறுகின்றதாகவே காணப்படுகிறது.

இது அரச ஊழியர்களின் தொழில் உரிமைகளையும், ஒழுங்கமைக்கும் உரிமையையும் மோசமாக பாதிக்கிறது. கருத்துச் சுதந்திரத்துக்கான உரிமை என்பது இலங்கை அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓர் அடிப்படை உரிமையாகும்.

அது மட்டுமல்லாது தகவல் அறியும் உரிமை என்பது அரசமைப்பால் உத்தரவாதம் அளிக்கப்பட்ட ஓர் அடிப்படை உரிமையாகும், மேலும் 2016 ஆம் ஆண்டு முதல் தகவல் கொள்கைகள் தொடர்பில் புதிய பார்வையும், நல்லெண்ணமும் தகவல் உரிமைச் சட்டத்தின் மூலம் மக்கள் மத்தியில் உருவாகியுள்ளது.

எனவே, காலாவதியான ஸ்தாபனக் குறியீட்டின் விதிகள் மாற்றப்படாதிருப்பின் உடனடியாக மாற்றப்பட வேண்டியவை எனப் பதிவுசெய்யப்பட வேண்டும், மேலும் தகவல்களைப் பொதுநலனுடன் வெளிப்படுத்தும் அதிகாரிகளை தங்கள் அதிகாரத்தைக் கொண்டு அடக்குவதற்கு பயன்படுத்தக்கூடாது.

கொவிட்-19 தொற்றுநோயைக் கட்டுப்படுத்துதல் மற்றும் நிர்வகிப்பது தொடர்பாக பல்வேறு தொழிற்சங்கங்கள் மற்றும் சுகாதாரத் துறையில் முன்னணி நபர்களால் தகவல்கள், சிக்கல்கள் மற்றும் அவை தொடர்பான பரிந்துரைகள் வெளிப்படுத்தப்படுகின்றன. சுகாதாரக் கொள்கைகள் முறையாக நடைமுறைப்படுத்தப்படாவிட்டால், அவை மக்களையும் நாட்டையும் பாதிக்கும் மிக முக்கியமான பிரச்சினையாக மாறிவிடும். தற்போது உள்ள தொற்றுநோய் சூழ்நிலையில் அது தொடர்பான உண்மை நிலை கண்டறியப்பட்டு அதற்குரிய நடவடிக்கைகளை எடுப்பதோடு அவற்றைச் சரியான திசையில் கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக சட்டத்தில் செயலிழந்து போய் காணப்படும் விதிகள் பொதுமக்களின் நலனுக்காக திருத்தப்பட வேண்டிய சூழ்நிலையை நாடு எதிர்கொள்கிறது. மற்றும் அனைத்து அதிகாரிகளும் சமூகப் பொறுப்புடன் செயற்பட வேண்டும். செயலாளர் எச்சரித்தபடி பொதுமக்களுக்கு உண்மைத் தகவல்களை வழங்காது போனால் அதனால் பாரதூரமான விழைவுகளே ஏற்பட வாய்ப்புள்ளது.

தகவல்களை மறைப்பதில் எந்த அர்த்தமும் இல்லை. எனவே, சுதந்திர ஊடக இயக்கம், சுகாதார செயலரையும் அந்தத் துறை சார்ந்த பிற அதிகாரிகளையும் நிலைமைகளுக்கு ஏற்றவாறு சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கேட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநருக்கு எதிராக மருத்துவர் வழக்குத் தாக்கல்

## புதிய விசாரணைக் குழுவை நியமித்தது அமைச்சு

**யாழ்ப்பாணம், மே 22**

**பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகர், தன்னைப் பணி இடைநிறுத்தியமைக்கு எதிராக வடக்கு மாகாண ஆளுநர் உட்பட 5 பேருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.**

அதேவேளை, குறித்த மருத்துவ அத்தியட்சகருக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணை செய்வதற்கு புதிய விசாரணைக் குழுவை வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர் நியமித்துள்ளார்.

பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகராகக் கடமையாற்றிய தம்பாப்பிள்ளை குகதாசன் கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 14ஆம் திகதி வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரால் பணி இடைநிறுத்தப்பட்டார். அவருக்கு எதிராக மோசடிக் குற்றச்சாட்டுக்கள் உட்பட பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டிருந்தன.

இது தொடர்பில் விசாரணை நடத்துவதற்காக கடந்த ஆண்டு ஏப்ரல் மாதம் 11ஆம் திகதி விசாரணைக் குழு நியமிக்கப்பட்டது. யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை மருத்துவ நிபுணர் எஸ்.பிரேமகிருஸ்ணா தலைமையில் அமைக்கப்பட்ட அந்தக் குழுவில், வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் மூத்த உதவிச் செயலர் எஸ்.பிரணவநாதன், யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பிரதிப் பணிப்பாளராக இருந்த எஸ்.சிறிபவானந்தராஜா ஆகியோர் உள்ளடக்கப்பட்டிருந்தனர்.

இந்த விசாரணைக் குழுவின் அறிக்கை வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு கடந்த ஆண்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி கிடைக்கப்பெற்றிருந்தது. விசாரணை அறிக்கையில் பரிந்துரைகள் எவையும் முன்வைக்கப்படவில்லை. அதேவேளை, அவரை மீளவும் பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் அத்தியட்சகராக நியமித்தால் முரண்பாடுகள் அதிகரிக்கக்கூடிய சூழல் காணப்படுகின்றது என்று தமது விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் வாகனத்துக்குரிய கொடுப்பனவையும் மருத்துவ அத்தியட்சகர் பெற்றுக்கொண்டு அதற்கு மேலதிகமாக அம்புலன்ஸ் பயன்படுத்தியமை ஆதாரபூர்வமாக சந்தேகத்து இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளது. எனவே, மருத்துவ அத்தியட்சகர் பணம் மீளச் செலுத்த வேண்டும். அவர் அதனைச் செலுத்தாதவிடத்து அவருக்கு எதிராக முறையான நடவடிக்கையை திணைக்களத் தலைவர் மேற்கொள்ள வேண்டும் என்று விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணம் இதுவரை மீளச் செலுத்தப்படவில்லை. அத்துடன் விசாரணைக் குழுவால் குற்றச்சாட்டுப் பத்திரமும் முன்வைக்கப்படவில்லை.

இந்த நிலையில் விசாரணைக் குழுவின் அறிக்கையை தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட மருத்துவ அத்தியட்சகர், நீதிமன்றில் வழக்குத் தொடர்ந்துள்ளார். தன்னை மீளவும் நியமிக்காமை தொடர்பில் யாழ்ப்பாணம் மேல்நீதிமன்றில் கடந்த ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

வழக்கின் பிரதிவாதிகளாக வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசாரணைக் குழுவின் தலைவர் மருத்துவ நிபுணர் எஸ்.பிரேமகிருஸ்ணா, வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலர், வடக்கு மாகாண பிரதம செயலர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோர் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இதற்கிடையில், பருத்தித்துறை ஆதார மருத்துவமனை அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தால், மேற்படி மருத்துவ அத்தியட்சகருக்கு எதிராகப் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு வடக்கு மாகாண ஆளுநருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் செயலரால், ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி மூவர் அடங்கிய புதிய விசாரணைக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மாவட்ட மேலதிக மாவட்டச் செயலர் சு.முரளிதரன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் க.நந்தகுமாரன், வடக்கு மாகாண சுதேச மருத்துவத் திணைக்களத்தின் கணக்காளர் திருமதி சி.கவிதா ஆகியோரே நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தக் குழு மருத்துவ அத்தியட்சகருக்கு எதிரான விசாரணைகளை ஆரம்பித்துள்ளது. (ஒ.5)



## வவுனியா விபத்தில் ஒருவர் சாவு

வவுனியா, மே 22

வவுனியா மணிக்கூட்டுக்கோபுர சந்தியில் நேற்று மாலை இடம்பெற்ற கோர விபத்தில் படுகாயமடைந்த முதியவர் சிகிச்சை பயனளிக்காது சாவடைந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர். வவுனியா பூம்புகார் பகுதியிலிருந்து கண்டி வீதி வழியாக பயணித்த டிப்பர் வாகனம் மணிக்கூட்டுக் கோபுரச் சந்தியில் சென்றுகொண்டிருந்தபோது, இதே சந்தியால் திரும்ப முற்பட்ட மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் விபத்து இடம்பெற்றது. விபத்தில், மோட்டார் சைக்கிளில் பயணித்த முதியவர் படுகாயமடைந்த நிலையில், வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் அவர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர். சம்பவத்தில் தேக்கவத்தை பகுதியைச் சேர்ந்த இராசேந்திரம் (வயது 65) என்பவரே உயிரிழந்தார். வவுனியா பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர். (து-110)


# இந்த வருட ஆற்றலாளர் விருதுக்கு மருத்துவரும் பேராசிரியரும் தெரிவு

## தெல்லிப்பழை தேவஸ்தானத்தில் உருவான அறநிதிய சபை வழங்குகிறது

யாழ்ப்பாணம், மே 22

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், அதன் தலைவர் கலாநிதி செஞ்சொற்செல்வர், கலாநிதி. ஆறு.திருமுருகனைக் கௌரவித்து பிறந்தநாள் அறநிதியச் சபையை உருவாக்கி புதியதோர் அறக்கட்டளையை நிறுவியுள்ளது. ஆண்டுதோறும் எம் மண்ணில் இளைய தலைமுறைக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் ஆற்றலாளர் இருவரைத் தெரிவு செய்து அவர்களுக்கு சிறப்பு விருது வழங்கிக் கௌரவித்தல் என்ற திட்டத்தையும் அவர்கள் ஏற்படுத்தியுள்ளார்கள்.

அதன்படி, அறநிதியச்சபை கூடி 2021 ஆண்டுக்கான ஆற்றலாளர் விருது பெறுபவர்களை இருவரைத் தெரிவுசெய்துள்ளனர்.



யாழ்ப்பாணம் நரம்பியல் சத்திர சிகிச்சை மருத்துவ வல்லுநர் பொன்னம்பலம் ஆதித்தன் மற்றும் யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மருத்துவ பீட பேராசிரியர் கலாமதி முருகானந்தன் ஆகியோரே கௌரவிக்கத் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். மேற்குறிப்பிட்ட இரு ஆற்றலாளர்களும் இந்த ஆண்டுக்கான அறநிதிய விழா நடைபெறும் நாளில் கௌரவிக்கப்படவுள்ளனர். நாட்டின் அசாதாரண சூழலை கருத்தில் கொண்டு அறநிதிய வைபவம் திகதி குறிப்பிடப்படாமல் ஒத்திவைக்கப்பட்டுள் ளது என்று தெரிவிக்கப்பட்டது. (கு)

# துல்ஹிரிய தொழிற்சாலையில் 400 பேருக்குக் கொரோனா

## விசாரணைக்கு உத்தரவு

கொழும்பு, மே 22

துல்ஹிரிய ஆடைத் தொழிற்சாலையில் 400 தொழிலாளர்கள் கொரோனாத் தொற்றுக்குள்ளாமை தொடர்பில், உடனடியாக விசாரணை நடத்துமாறு தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழிலாளர் ஆணையாளர் பிரபாத் சந்திரகீர்த்தி சில்வாவுக்கு உத்தரவிட்டுள்ளார்.

ஒரே தொழிற்சாலையில் பெருந்தொகையான தொழிலாளர்கள் கொவிட் தொற்றால் பாதிக்கப்பட்டிருப்பது துரதிர்ஷ்டமானது.

எனவே தொழிற்சாலையில் உடனடியாக சுகாதாரக் குழுவை அமைத்து, சுகாதார அமைச்சால் வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்கள் பின்பற்றப்பட்டனவா என்பது தொடர்பில் விசாரணையை ஆரம்பிக்குமாறு தொழிலாளர் ஆணையாளர் நாயகத்துக்கு அமைச்சர் அறிவுறுத்தியுள்ளார்.

அதேவேளை தனியார் துறை தொழிற்சாலைகள் மற்றும் பணியிடங்களில் சுகாதாரக் குழுக்களைச் செயற்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு நிறுவனங்களின் தலைவர்கள் மற்றும் தொழிற்சங்கத் தலைவர்களுக்கும் அமைச்சர் உத்தரவிட்டுள்ளார். (ம-4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org